வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 26.05.2022 வியாழக்கிழமை | இதழ் : 171 | பக்கங்கள் : 16

# இரட்டை குடியுரிமை விவகாரத்தில் ரணிலுக்கு பெரமுன கிடுக்கிப்பிடி!

## 21இற்கு ஆதரவளிக்கவும் மறுப்பு

கொழும்பு, மே 26

**21ஆவது திருத்தத்தின் மூலம் இரட்டை குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடலாம் என்ற விதியை நீக்கினால் நாம் ஆதரவு அளிக்க மாட்டோம் என்று பொதுஜன பெரமுன கட்சி திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.**

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகரான பஸில் ராஜ பக்ஷ அமெரிக்க குடியுரிமை பெற்றவர் என்பதுடன் இருபதாவது திருத்தத் தின் மூலம் அவர் பாராளுமன்றம் வந் தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எதிர்க்கட்சியில் உள்ள பலரின் அழுத்தங்களின் பேரில் அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அமைச்சரவை யில் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் வெள்ளிக்

15



## 1990ஐ அழையுங்கள்

கொழும்பு, மே 26

அவசர மருத்துவ சேவைகளை பெற அம் புல்னஸ் வாகனம் தேவை யாயின் 1990 என்ற அவசர இலக்கத்துக்கு அழைப்பு எடுக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.

1990 என்ற 'சுவசெரிய' சேவைக்கு சொந்தமான அம்புலன்ஸ் வண்டிகள் எரிபொருள் நிரப்பப்பட்டு எந்நேரமும் பயணத்துக்கு தயாராக உள்ளன.

இந்த சேவையை இலவசமாக - நாடு முழுவதும் பெற முடியும் என்று

15

## 6 வாரங்களுக்குள் இடைக்கால பாதீடு

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே. 26

6 வாரங்களுக்குள் இடைக்கால பாதீட்டை சமர்ப் பிப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள் ளார். ரொய்ட்டர் செய்திச் சேவைக்கு வழங்கிய நேர் காணல் ஒன்றிலேயே அவர் இதனை கூறியுள்ளார். (அ)

## அத்தியாவசிய பணியாளர்களே இன்றுமுதல் பணிக்கு அழைப்பு!

கொழும்பு, மே 26

பொதுச் சேவைகளை வழங்குவதற்கு அத்தியாவசி யமான உத்தியோகத்தர்களை மாத்திரம் கடமைக்கு அழைக்கும் நடைமுறை இன்று வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இது தொடர்பில் திணைக்கள தலைவர்கள் உரிய தயாரிப்புக்களை செய்து அவற்றை நடை முறைப்படுத்துமாறு பொது நிர்வாக சேவை

15



## நிதி அமைச்சரானார் ரணில்!

கொழும்பு, மே. 26

சர்வகட்சி அரசாங்கத்தின் நிதி அமைச்சு பதவி, பிரத மர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில், அவர் நேற்று பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

இலங்கையின் 24 ஆவது நிதி அமைச்சர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆவார் .

தனது 45 வருடகால அரசியலில் இம்முறையே நிதி அமைச்சு பதவியை பொறுப்பேற்றுள்ளார். (அ)

## நாட்டைக் காப்பாற்றவே ரணில் ஆட்சிக்கு வந்தார்!

கொழும்பு, மே. 26

ரணில் ஆட்சிக்கு வந் தது ராஜபக்ஷக்களைக் காப்பாற்ற அல்ல என்றும் ராஜபக்ஷக்களிடம் இருந்து நாட்டைக் காப் பாற்றவே ரணில் ஆட் சிக்கு வந்தார் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைமையகமான சிறிகொத்தாவில் இடம் பெற்ற மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு உரை

15

## எரிவாயு விலையும் அதிகரிக்கின்றது?

### இன்றும் விநியோகம் இல்லை

கொழும்பு, மே 26

சமையல் எரிவாயுவின் விலையை மீண்டும் உயர்த்துவதற்கு லிட்ரோ நிறுவனம் அரசாங்கத்தி டம் அனுமதி கோரியுள் ளது. இதற்கமைய, 12.5 கிலோ எடையுடைய எரி வாயு 5 ஆயிரம் ரூபாயை யும் விட அதிகரிக்கலாம் என்று அந்த நிறுவனத் தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ரூபாய்க்கு எதிரான டொலரின் விலை அதி கரிப்பு, உலக சந்தையில் சமையல் எரிவாயு விலை அதிகரிப்பு என்பவற்றால் தற்போ தைய விலையில்

15

## வெளிநாட்டு வேலை வாய்ப்பை இலக்காக வைத்து பயிற்சிகள்!

### ஜனாதிபதி கோட்டாபய பணிப்பு

கொழும்பு, மே 25

பல்வேறு துறைகளில் திறமையான தொழிலா ளர்களுக்கு ஜப்பான், போலாந்து மற்றும் ருமே னியா உள்ளிட்ட நாடு களில் பல்வேறு வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன. அந்த வாய்ப்பு களை இலக்காகக் கொண்டு மொழி மற்றும் தொழில்

15

## தமிழக அரசின் உதவி பொருள்

## யாழ்ப்பாணத்துக்கு 20 ஆயிரம் பொதிகள்!

யாழ்ப்பாணம், மே 26

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு அனுப்பப் பட்ட உதவித் திட்டத்தில் முதற்கட்டமாக சுமார் 20 ஆயிரம் அரிசி பொதிகளும் 7,500 கிலோ பால் மாவும் கிடைக்கவுள்ளன. இவை, முன்னுரிமை அடிப் படையில் வறிய மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வுள்ளன என்று யாழ். மாவட்ட அரசாங்க அதி

15

## இலங்கைக்கு நிதி உதவி; கைவிரித்தது உலக வங்கி!

வாஷிங்டன், மே 26

போதுமான பொருளாதாரக் கொள்கை கட்ட மைப்பை நடைமுறைப்படுத்தும்வரை இலங்கைக்கு புதிய நிதி உதவியை வழங்கும் திட்டம் எதுவுமில்லை - என்று உலக வங்கி அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான உலக வங்கியின் அறிக்கை யில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கடன் வழங்க புதிய கடன் உறுதிப்பாடு களை வழங்க உலக வங்கி திட்டமிடுவதாக வெளி யான ஊடக தகவல்கள் தவறானவை.

இலங்கைக்கு உதவுவதற்காக சர்வதேச நாணய

15

## 16 இலட்சம் லீற்றர் பெற்றோல் 18 நாட்களில் யாழில் விநியோகம்!

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணத்தில் கடந்த 2ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையான 18 நாட்களில் 46 இலட்சத்து 10 ஆயிரத்து 400 லீற்றர் 92 ஒக்ரென் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது என்று மாவட்ட செயலர்

15

## இந்தியாவிலிருந்து வரும் பொருட்கள் காங்கேசன்துறையில் இறக்கப்படும்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கிளிநொச்சி, மே 26

இந்தியாவிலிருந்து வரும் பொருட்களை காங் கேசன்துறை துறைமுகத் தில் இறக்குவதற்கு நட வடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தலைமை யில் கலந்துரையா டல் ஒன்று நடை

15

# இப்படியும் நடக்கிறது…!

காலிமுகத்திடல் போராட்டத்தின் பின்னணியில் இரண்டு இடதுசாரி இயக்கத்தினர் இருக்கின்றனர் என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

அவர்களில் முதன்மையானவர்கள் ஜேவிபியினர். அதனால்தான், மே ஒன்பதில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள்மீது வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்ட பின்னர், அங்கு விஜயம்செய்த ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசநாயக்காவுக்கு வரவேற்பு வழங்கப்பட்டதும், அவர் அங்கு சென்று வெளியேறிய பின்னர் அங்கு விஜயம்செய்த சஜித் பிரேமதாச தாக்குதலுக்குள்ளானதும் நடந்தது.

இந்த காலிமுகத்திடல் 'கோட்டா கோ கம'வின் பின்னணியில் இருக்கின்ற மற்றுமோர் இடதுசாரி அமைப்பு, முன்னிலை சோஸிசக் கட்சி. தெற்கில் அதிகம் மக்கள் செல்வாக்கு இல்லாதபோதிலும், அமைப்பு ரீதியாக ஜேவிபியைப் போல தெற்கில் ஓர் இளைஞர் படையை தன்வசம் கொண்டிருக்கும் ஓர் அமைப்பு அது. அந்த அமைப்பினர் இப்போது ஒவ்வோர் அரசியல் கட்சிகளாக சென்று சந்தித்து வருகின்றனர். முன்னதாக, கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஆபிரகாம் சுமந்திரனின் கொழும்பு வீட்டுக்கு சென்று அவரைச் சந்தித்திருந்தனர். அந்தச் சந்திப்பின்போது அவரது சகா சாணக்கியனும் உடனிருந்தார். அவர்களுடனான சந்திப்பு தனிப்பட்ட சந்திப்பா அல்லது, கட்சி ரீதியான சந்திப்பா என்பது தெரியவில்லை. அதனால் அந்தச் செய்தி 'ஈழநாடு'ல் வெளிவரவில்லை. ஆனால், நேற்று முன்தினம் தமிழ் முற்போக்கு கூட்டணியை அதன் தலைவர் மனோ கணேசனின் வீட்டில் அக்கட்சியினர் சந்தித்திருந்தனர். இந்தச் சந்திப்பு தொடர்பான செய்தியை மனோ கணேசன் ஊடகங்களுக்கும் அனுப்பியிருந்தார். அதனைக் கண்டதும், ஊர்க்குருவி மனோ கணேசனுடன் தொடர்புகொண்டபோது, அவர்கள் ஒவ்வோர் அரசியல் கட்சியாக சந்தித்து, நாட்டில் தற்போதைய நிலை குறித்த விவாதித்து வருவதாகவும், அதன் தொடர்ச்சியாகவே தமது கூட்டணியையும் சந்திக்க நேரம் கேட்டிருந்ததாகவும் தெரிவித்தார்.

அதாவது, அவர்கள் தமது கூட்டணியை சந்திக்கவேண்டும் என்று கேட்டதும், மனோ கணேசன், தனது கூட்டணியின் மற்றைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களையும் அழைத்து சந்தித்திருந்தார். ஆனால், நமது கூட்டமைப்புடனான சந்திப்பு மட்டும் ஒரு கட்சியைச் சேர்ந்த இரண்டு பேருடன் மாத்திரம் நடந்து முடிந்ததோடு, அதுகுறித்து ஊடகங்களுக்கும் விபரம் தெரிவிக்கப்படவில்லை.

இது வழமையான ஒன்றுதான் என்பதால் நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளே அதனை பெரிதுபடுத்தாதபோது, நமக்கேன் வேண்டாத வேலை.

இங்கே சொல்லவருவது, வேறு சங்கதி பற்றியது. நாட்டில் இன்று எற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இடம்பெறும் வன்முறைகளின் பின்னால் யார் இருக்கிறார்கள் என்பதும், ஏற்கனவே பலதடவை இந்தப் பத்தியில் நாம் பார்த்த விடயம்தான்.

இப்போது, எமது கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நெதர்லாந்து நாட்டிற்கு சென்றிருக்கின்றார். டிஏஜி என்ற 'டயலொக் அட்வைசறி குறூப்' என்ற ஓர் அரசுசார்பற்ற நிறுவனத்தின் மாநாடு ஒன்றிகாகவே அவர் அங்கு சென்றிருப்பதாக கூறப்பட்டிருக்கின்றது.

அந்த நிறுவனத்தின் இணையத்தள பக்கத்திற்கு சென்று பார்த்தால்,

The Dialogue Advisory Group is an independent organisation that facilitates political dialogue to reduce violence. We facilitate political dialogues between armed groups, governments and international organisations in conflict situations.

இதுவே அந்த நிறுவனம் பற்றிய அறிமுகமாக தரப்பட்டிருக்கின்றது.

அந்த அமைப்பு, வன்முறைகளைக் குறைக்க அரசியல் உரையாடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. நெருக்கடி நேரங்களில், ஆயுதக்குழுக்கள், அரசாங்கங்கள், சர்வதேச அமைப்புக்களிடையே உரையாடல்களுக்கு வசதி செய்துகொடுக்கின்ற பணியையே அந்த நிறுவனம் செய்கின்றது.

அப்போ, நமது தலைவர் எந்த தரப்பின் பிரதிநிதியாக அங்கு சென்றிருக்கின்றார் என்பது தெரியவில்லை. வன்முறையில் ஈடுபடும் குழு சார்பிலா? அல்லது அரசாங்கம் சார்பிலா?

ஆனாலும், தமிழர்கள், முஸ்லிம்களை வேண்டத்தகாதவர்களாக நினைத்த கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கள மக்களின் வாக்குகளாலேயே தான் ஜனாதிபதியாகியதாக பெருமை பேசினார். தன்னனை சிங்களத் தலைவராக அடையாளப்படுத்தினார். ஆனால், அவரையும் நாட்டையும் பாதுகாக்க, தனி ஒருவனாக ஓடி ஓடி உழைக்கின்றார் ஒரு தமிழ் தலைவர். யார் குற்றினாலும் நமக்கு அரிசி கிடைத்தால் சரிதானே!

- ஊர்க்குருவி

# மத்திய வங்கி ஆளுநர் பதவியிலும் மாற்றம்?

கொழும்பு, மே 26

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவை பதவி விலக்குவதற்கு அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த பதவிக்கு மீண்டும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமியை நியமிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திரஜித் குமாரசுவாமி சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக, அரசாங்கத்துக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

பொருளாதார நெருக்கடி உக்கிரமடைந்த நிலையில், ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகை தந்த நந்தலால் வீரசிங்க மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# சிற்றுண்டி விலை 10 ரூபாவினால் அதிகரிக்கும்

கொழும்பு, மே 26

சிற்றுண்டிகளின் விலையை 10 ரூபாவினால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக, சிற்றுணவக உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பானது அனைத்துப் பொருட்களுக்கும் தாக்கம் செலுத்துகின்றது.

எனவே, நூற்றுக்கு 10 சதவீதத்தினால், சிற்றுணவகங்களின் உணவு மற்றும் பானங்களின் விலைகளை அதிகரிக்குமாறு சிற்றுணவக உரிமையாளர்களிடம் கோருவதாக அந்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார். (அ)

# தெணியானின் எழுத்துகள் புதிய சமுதாயம் படைக்கும்!

## அஞ்சலி உரையில் சிறிதரன் எம். பி.

வடமராட்சி, மே 26

அமரர் தெணியானின் ஒவ்வோர் எழுத்தும் நீண்டகாலம் வாழப் போகிறது. அவரின் எழுத்துக்களை நூல்களை மேற்கோள் காட்டாமல் பேச முடியாது. இவரை ஆய்வு செய்யவும் முயல்வார்கள்.

இவ்வாறு இலங்கையின் மூத்த எழுத்தாளர் தெணியானின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தி உரையாற்றியபோது தெரிவித்துள்ளார் சிறீதரன் எம்.பி.

பிரபல எழுத்தாளர் தெணியானின் இறுதிச் சடங்கு நேற்ற அவரின் இல்லத்தில் எழுத்தாளர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இதில், அஞ்சலி உரையாற்றிய சிறீதரன் எம்.பி. எழுத்து ஆயுத்தத்தின் ஊடாக சமூக விடுதலைக்காக உழைத்த இமயம் சரிந்து விட்டது. 1950 களில் எமது மண்ணில் இருந்த சமூக ஒடுக்கு முறைகளை ஒழிப்பதற்காக எழுத்தாளர் டானியலுடன் இணைந்து பணியாற்றியுள்ளார்.

தெணியகம் கிராமத்தில் பிறந்த அவர் பட்டிமன்ற உரைகள், எழுதும் ஆற்றல்களால் சமூக விடுதலைக்காக குரல்கள் கொடுத்து வந்துள்ளார். அவர் பெற்ற விருதுகள், எழுத்துலகத்துக்காக கிடைத்த பெறுமதிகள் மனித வாழ்வில் பிறப்பு ஒரு சம்பவம் இறப்பு ஒரு சரித்திரம். பொற்சிறையில் வாடும் புனிதர்கள் என்ற நாவலை கடந்த இரவு படித்தேன். இவரின் நாவல்கள், சிறுகதைகள், சமூக ஒழுங்கு முறைகளை எடுத்துக் கூறுகின்றன.

தெணி என்ற கிராமத்தில் பிறந்து ஒரு தமிழ் ஆசிரியராக தன்னை அடையாளப்படுத்தி, தேசப்பற்றுள்ள ஒரு எழுத்தாளனாக உயர்ந்தவரை இழந்து விட்டோம். அவரின் பணிகள் எதிர்காலத்தில் புதிய சமுதாயம் படைக்க பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை - என்றார். (ஐ-2)

# விமான நிலையங்கள் 31 ஆம் திகதியுடன் மூடல்?

கொழும்பு, மே 26

எதிர்வரும் 31ஆம் திகதிக்கு பின்னர் கட்டுநாயக்க உட்பட அனைத்து விமான நிலையங்களும் மூடப்படும் அபாயம் உள்ளதாக தெரியவருகின்றது.

எரிபொருள் பற்றாக்குறையே இதற்கு காரணம் என விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றபோதும் இதனை அதிகாரிகள் இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இம்மாதம் 31ஆம் திகதி வரை மட்டுமே விமானங்களுக்கு தேவையான எரிபொருள் இருப்பதாக விமான நிலைய மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தரையிறக்கப்படும் பல விமானங்கள் எரிபொருள் நிரப்புவதற்காக சென்னைக்கு திரும்பியுள்ளதாகவும் விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# சாவகச்சேரி விபத்து; ஒருவர் படுகாயம்!

தென்மராட்சி, மே 26

சாவகச்சேரி மருத்துவமனைக்கு அண்மையாக டிப்பர் மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

நேற்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வரே படுகாயமடைந்தவர்.

காயமடைந்தவர் உடனடியாக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-2)

# தமிழக நிவாரணம் உரியவாறு பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்!

## ஜீவன் தொண்டமான் வலியுறுத்து

கொழும்பு, மே 26

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் இலங்கை மக்களுக்கு வழங்கிய நிவாரணப் பொருட்கள், வறுமையில் வாடும் மலையக மக்கள் உள்ளிட்ட ஏனைய மாவட்டத்தில் வறுமையில் உள்ள அனைவருக்கும் உரிய வகையில் பகிர்ந் தளிக்கப்பட வேண்டும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

குறிப்பாக மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் சிபாரிசுகளுடன் அரசாங்க அதிபர் ஊடாக மலையகத்தில் வறுமையில் வாடும் மக்கள் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுவது கட்டாயமானது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொருட்கள், பொருளாதார நெருக்கடியால் துன்பப்படும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் எனவே, இவற்றை உரிய அனைவருக்கும் சரியாக பகிர்ந் தளிப்பது அனைவரதும் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# கல்வித்துறையில் உள்ள பிரச்னைகள் டிசெம்பர் மாதத்துக்குள் தீர்க்கப்படும்

கொழும்பு, மே 26

கல்வித் துறையில் அவசியமாக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் ஒழுங்கமைக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பரீட்சை நடத்துதல், பெறுபேறு வெளியிடல், பாடப் புத்தங்கள் விநியோகித்தல், பல்கலைக்கழக பிரவேசம் போன்ற கல்வித்துறையின் நடவடிக்கைகளை எதிர்வரும் டிசெம்பர் மாதத்திற்குள் சீரமைக்க முடியும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நம்பிக்கை வெளியிட்டார். (அ)

ஈழநாடு
Eelanadu
26.05.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 12

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# நிதியமைச்சர்கள்?

ஆரம்பத்தில் சகோதரர்களுக்கிடையில் பரிமாற்றப்பட்ட நிதியமைச்சர் பதவி தற்போது, புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கைகளுக்கு வந்திருக்கின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டபோது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே நிதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். அனைத்தும் தங்களின் கட்டுப் பாட்டில் இருக்க வேண்டுமென்னும் அடிப்படையில்தான் நிதியமைச்சு, மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டது.

20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, பெரும் கெட்டித்தனம்மிக்கவரான தோற்றத்துடன், பஸில் ராஜபக்ஷ நிதியமைச்சராக நியமிக்கப்பட்டார். மீண்டும் நிதியமைச்சர் பதவி ராஜ பக்ஷ குடும்பத்திற்குள் பவுத்திரமாகப் பாதுகாக்கப்பட்டது. நிதியமைச்சு நாட்டின் முக்கியமான அமைச்சுக்களில் ஒன்று. அனைத்து முக்கிய அமைச்சுக்களும் தங்களின் குடும்பத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமென்னும் கபட நோக்கத்தோடுதான், பஸில் நியமிக்கப்பட்டார். வீழ்ந்து செல்லும் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த வல்லவர் - என்னும் புளகாங்கிதமூட்டும் கதைகளுடன்தான், பஸில் நிதியமைச் சைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பஸில் நிதி அமைச்சை பொறுப்பேற்றவேளையில், 'ஈழநாடு' விட யங்களைத் தெளிவாக எதிர்வுகூறியிருந்தது. அதாவது, எவர் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தை சீரமைக்க முடியாது. சர்வதேசத்தின் நன் மதிப்பை வெற்றிகொண்டால் மட்டுமே, பொருளாதாரத்தை சீரமைக்க முடியும் – எனவே, நபர்களை மாற்றுவதால் எந்தவொரு பெரிய மாற்றங் களும் ஏற்படப்போவதில்லை என்பதை நாம் அழுத்தம் திருத்தமாக குறிப்பிட்டிருந்தோம். ஆனால், பொதுஜன பெரமுனவின் கீழ் மட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், பொதுஜன பெரமுனவின் அடிமட்ட தொண்டர்களும் பஸில் ராஜபக்ஷவை ஒரு மீட்பர் போல், அப்போது கொண்டாடிக் கொண்டிருந்தனர்.

பஸிலால் நிலைமைகளில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. இந்த நிலையில்தான், ராஜபக்ஷ குடும்பத்தின் அதிகார மையத்துக்கு எதிரான மக்கள் ஆவேசம் பரவலடைந்து, ராஜபக்ஷ க்களின் அதிகார மையம் ஆட்டம்கண்டது. இதன் விளைவாகவே ராஜபக்ஷக்கள் பதவி விலகி, தலைமறைவாக வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. இந்த நிலையில், நீதியமைச்சராக இருந்த, ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, நிதியமைச்சரானார். நிதி விவகாரங்களில் எவ்வித அனுபவங்களும் அற்றவரான சப்ரியின் நிதியமைச்சும் நீடிக்கவில்லை.

இப்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்றார். முன்னதாக, இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு சம்பிக்க ரணவக்கவிடம் கேட்டதாகவும், பின்னர், ஹர்ஸ டீ சில்வாவிடம் கேட்டதாகவும் செய்திகள் வெளியாகியபோதிலும், தற்போது நாட்டின் பொருளாதாரத்தை மீட்கும் ஒரேயோர் இலக்குடன், ஓர் ஆசனத்தின் மூலம் பிரதமராக வந்திருக்கும், ரணில் விக்கிரம சிங்கவே, நிதியமைச்சராகவும் பதவியேற்றிருக்கின்றார். இதன் மூலம், அவரின் பணி மேலும் அதிகரித்திருக்கின்றது. ரணில் அனுபவமும், சர்வதேச நிறுவனங்களுடன் நெருக்கமான தொடர்புகளும் கொண்டவர் என்பதில் ஐயமில்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற சர்வதேச நிதி அமைப்புக்களுடன் செயல்பட்ட அனுபவங்களை கொண்டவர்.

அந்த வகையில் நிதி அமைச்சை நிர்வகிக்கும் திறன் அவருக்கு உண்டுதான். ஆனால், ஒரேநேரத்தில் பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் ஸ்திரத்தன்மையையும் பேணிப் பாதுகாக்கும் தலையாய பொறுப்புடன் காட்சியளிக்கும், ரணில், எவ்வாறு நிலைமைகளை சமா ளிக்கப் போகின்றார்? அவரால் முடியுமா? எவ்வாறு? இந்தக் கேள்வி களுடன்தான், நாட்டின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்

# வங்குரோத்து நிலைக்கு கீழேயும் மோசமடையவுள்ள இலங்கை!

அலசுவது இராஜதந்திரி

உலக வங்கி ஏற்கனவே இலங்கைப் பொருளாதார நிலைமை மோசம டைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ள நிலை யில் இலங்கையின் மத்திய வங்கி தற்போ தைய பொருளாதார நிலைகுறித்து கடுமை யான எச்சரிக்கையை விடுத்துள்ளது.

உலக வங்கி கடந்த மாத இறுதிப்பகுதியில் விடுத்திருந்த எச்சரிக்கையில் இலங்கை பொரு ளாதார ரீதியான சீர்திருத்தங்களை மேற் கொள்ளாவிடில் மிகமோசமான விளைவு களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டிருந்தது. இதனையடுத்து இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் இலங்கை வங்கு ரோத்து நிலைக்கு கீழேயும் சென்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளதோடு நீண்டகால பொருளாதார உறுதிப்பாட்டை கருத்தில் கொண்டு வகுக்கப்படும் திட்டங்களுக்கு அரசியல்வாதிகள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் என்றுமில்லாதவகையில் மிகமோசமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் பொருளாதாரம் சந்தித்துள்ள இக்கட்டான நிலையை சுட்டிக்காட்டியுள்ள இலங்கை மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, தற்போதைய இக்கட் டான பொருளாதார நிலவரத்தை சீர்செய்ய அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

உலக வங்கி விடுத்துள்ள எச்சரிக்கையில் அதீத கடன் சுமையால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இலங்கை, தற்போதைய பொருளாதார நிலவரத்தை சீர்செய்யும் வகையில் நடந்து கொள்ளாவிடில் மேலும் அதல பாதாளத்துக்கே செல்லவேண்டிய நிலை ஏற்படுமென எச்சரித்துள்ளது. அத்து டன், மோசமான பொருளாதார நிலவரத்தின் தாக்கம் வறுமைக்கோட்டுக்கு கீழே இருப்பவர்களையே மிக அதிகமாக பாதித்து விடும் எனவும் உலக வங்கி எச்சரித்துள்ளது.

ஏற்கனவே இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிடமிருந்தும் பெருமளவு கடன்களை இலங்கை பெற்றுள்ளது. தெற்காசியப் பிராந்தியத்தில் பங்களாதேஷ் ஒரு வறுமையான நாடாக விளங்கியிருந்தது. ஆனால், தற்போது அந்த நாடு தனது பொரு ளாதாரத்தை குறிப்பிடத்தக்களவு சீர்செய்துள்ளது. ஆனால், இலங்கை வங்கு ரோத்து நிலையை எட்டியுள்ளமைக்கு அரச தரப்பில் நிலவிய ஊழல், மோசடிகளே முக்கிய காரணமாக அறியப்பட்டுள்ளது.

இலங்கை குடும்ப ஆட்சிகள் பலவற்றை கண்ட நாடாகும். ஆனால், ஜனாதிபதியாக வும் பிரதமராகவும் சகோதரர்களே இருந்து கொண்டு அவர்களின் ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் அரசாங்கத்தில் அங்கம் பெற்று உரிய பொருளாதார திட்டங்களை வகுக்காமல் நாட்டை குட்டிச்சுவராக்கும் நிலைக்குக் கொண்டுவந்துள்ளனர்.

இதன்காரணமாக உலக வங்கி, சர்வதேச நாணய நிறுவனம் ஆகியவை இலங்கையில் பொருளாதார ரீதியான பாதிப்புகளால்



ஏற்படக்கூடிய மிகமோசமான நிலைகுறித்து கடுமையான எச்சரிக்கையை விடுத்துள்ளன.

இலங்கையர்கள் வறுமைக் கோட்டுக்குக்கீழே விரைந்து தள்ளப்படும் நிலையை எட்டிவருகின்றனர் என்று உலக வங்கி எச்சரித்துள்ளது. இதன்காரணமாக ஏற் படுகின்ற தாக்கம் பலதரப்பட்ட சமூகவியல் ரீதியான பிரச்னைகளுக்கு இட்டுச்செல்லும் என்பதையும் அறியக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையில் குறிப்பாக தலைநகர் கொழும்பில் ஏற்கனவே அசாதாரண நிலவரம் தோற்றம் பெற ஆரம்பித்துள்ளது. மக்கள் எரிபொருளுக்காக நீண்ட வரிசைகளில் இருபத்து நான்கு மணித்தியாலங்களுக்கும் மேலாக எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக செலவிட்டு வருகின்றனர். அத்து டன், சமையல் எரிவாயுவுக்காகவும் கால் கடுக்க மக்கள் நின்று வருகின்றனர். எரி பொருள், சமையல் எரிவாயுவுக்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் இடங்களில் கைகலப்புகள்கூட ஏற்பட்டு பொலிஸாரும் இராணுவத்தினரும் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுமுள்ளனர்.


ஆபிரிக்க நாடுகளான எதியோப்பியா, சூடான் ஆகியவற்றில் நிலவுகின்ற மோசமான பொருளாதார நிலையைப்போன்றதொரு நிலையை இலங்கை எட்டியுள்ளது.

இலங்கையின் இன்றைய பொருளாதார நிலவரம் சார்ந்த கட்டமைப்பை எடுத்துக் கொண்டால் வெகுவிரைவில் களவு, கொள்ளை போன்ற சமூகவிரோத நடவடிக்கைகளும் அதிகரிக்குமென்றே ஊகிக்க முடிகின்றது.

இத்தகைய பின்னணியிலேயே உலக வங்கியின் எச்சரிக்கை இலங்கைக்கு வரு வாயை ஈட்டித்தந்த பல்வேறு காரணிகள் முடங்கிப்போயுள்ளதை ஆதாரம் காட்டி இலங்கையின் பொருளாதாரம் அதல பாதா ளத்தில் வீழ்ந்துள்ளதை சுட்டிக்காட்டியுள் ளது.

இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்குவகித்த உல்லாசப் பயணத்துறை முடங்கி யுள்ளது. அத்துடன், எரிபொருள் விலையேற் றம் ஆடை ஏற்றுமதி தொழிற்சாலைகளை நிலைதளர வைத்துள்ளது. அன்றாட போக்கு வரத்துக் கட்டணங்கள்கூட பலமடங்கு அதிகரித்துள்ள நிலையில் மேலும் பல பாதகமான சூழலுக்கு இலங்கை முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமென்றே உலக வங்கியின் எச்சரிக்கை எடுத்தியம்பு கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கையிருப்பு இன்று கரையும். பல வழியிலும் செலவுகள் உண்டாகும். கவனம் தேவை. வருமானத்திற்கு ஏற்ப செலவும் வந்து நிற்கும். ஆடம்பர செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்**
வருமானத்தில் இருந்த தடை விலகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வந்து சேரும். தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் அளவிற்கு பணவரவு வந்து சேரும். தொழிலில் லாபம் கூடும்.

**மிதுனம்**
தொழிலில் இருந்த தடை விலகும். முயற்சியில் வெற்றி கிடைக்கும். அரசுவகையில் ஆதயாம் உண்டு. புத்திசாலித்தனத்தால் தொழிலில் ஏற்பட்ட சரிவை சரிசெய்வீர்கள். நினைத்தது நிறைவேறும்.

**கடகம்**
புதிய சிந்தனை மேலோங்கும். இழுபறியான செயலையும் பெரியோர் ஆதரவுடன் முடிவிற்கு கொண்டு வருவீர்கள். மனதில் இருந்த குழப்பம் விலகும். செல்வாக்கு உயரும்.

**சிம்மம்**
புதிய வேலைகளில் இன்று ஈடுபட வேண்டாம். மனதை பாதிக்கும் சம்பவங்கள் இன்று நடக்கலாம். நிதானமுடன் செயல்பட வேண்டிய நாள். பயணத்தில் கவனம் தேவை.

**கன்னி**
இனிய சம்பவம் நடைபெற்று மகிழ்வீர்கள். குடும்பத்தில் செல்வாக்கு உயரும். மகிழ்ச்சியான நாள். கணவன் மனைவி பிரச்னைகள் விலகும். நண்பர்களால் எதிர்பார்த்ததை விட ஆதாயம் அதிகரிக்கும்.

**துலாம்**
உங்கள் செயல்களால் இன்று ஆதாயம் காண்பீர்கள். நீண்டநாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். மனதில் இருந்த சங்கடம் விலகும். தடைகளை உடைத்து வெற்றி காண்பீர்கள். யோகமான நாள்.

**விருட்சிகம்**
செயல்களில் இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். எளிதாக முடியவேண்டிய வேலை இழுபறியாகும். கவனக்குறைவால் முயற்சிகளில் தடைகளை சந்திப்பீர்கள். யோசித்து செயல்பட வேண்டிய நாள்.

**தனுசு**
மூலம் அரசு வகையில் பிரச்னை வரலாம். சட்டத்திற்கு புறம்பான செயல்களால் சங்கடம் உண்டாகலாம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். செல் வாக்குடையவர்களின் சந்திப்பால் நன்மை காண்பீர்கள்.

**மகரம்**
புதிய அணுகுமுறையால் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். நெருக்கடிகளை துணிச்சலுடன் சமாளிப்பீர்கள். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்**
கவனக்குறைவால் நஷ்டங்களை சந்திக்கலாம். புதிய முதலீடு குறித்த முயற்சி இன்று வேண்டாம். அலட்சியத்தால் சிலவற்றை தவற விடுவீர்கள். வீண் செலவால் குடும்பத்தினரின் எதிர்ப்புக்கு ஆளாவீர்கள்

**மீனம்**
மனதில் தெளிவு பிறக்கும். உங்களைச் சுற்றி இருப்பதில் நல்லவர், கெட்டவர் யார் யார் என்பதை தெரிந்து கொள்வீர்கள். மனதில் ஓய்வு குறித்த எண்ணம் மேலோங்கும். வேலைப்பளுவால் சோரவுக்கு ஆளாவீர்கள்.

# பிரதமர் நரேந்திர மோடி இன்று தமிழகம் வருகிறார்!

*சென்னை, மே 26*

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று தமிழகத்துக்கு வருகை தருகிறார். அவர், 12,413 கோடி இந்திய ரூபாய் மதிப்பிலான அபிவிருத்தி திட்டங்களை தொடக்கி வைப்பார்.

இன்று மாலை 5 மணிக்கு சென்னை விமான நிலையம் வரும் அவரை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின், ஆளுநர் ஆர். என். ரவி ஆகியோர் வரவேற்பர்.

நேரு உள்விளையாட்டரங் கில் நடக்கும் நிகழ்வுகள் 7.30 மணிக்கு நிறைவடையும். இதைத் தொடர்ந்து 7.40 மணிக்கு விமானப்படையின் விமானம் மூலம் அவர் டில்லி செல்வார்.



பிரதமர் வருகையை யொட்டி சென்னையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணி யில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். (ஐ)

# வெடிபொருள் வைத்திருந்த வழக்கு 5 இலங்கையருக்கு சிறை தண்டனை!

*சென்னை, மே 26*

வெடிபொருள் வைத்திருந்த இலங்கை தமிழர்கள் 5 பேருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெடிகுண்டுகள் செய்யத் தேவையான பொருட்களை வெளிமாநிலங்களிலிருந்து வரவழைத்து இலங்கை கொண்டு செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 2007ஆம் ஆண்டு 13 பேரை கியூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு சென்னை - பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி இளவழகன், ஐந்து பேரை குற்றவாளியாக இனங்கண்டார். இவர்களில், சிவகரன், முத்து ஆகிய 2 பேருக்கு தலா இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும், 30 ஆயிரம் இந்திய ரூபாய் அபராதமும், வேலுசாமி, கிரிதரன், கருணாகரன் ஆகிய 3 பேருக்கு தலா ஓராண்டு சிறை தண்டனையும், 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்த வழக்குடன் தொடர்புடைய நான்கு பேருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில் ஒருவர் இறந்து விட்டார். மூவர் தலைமறைவாகி விட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திராவிட முன்னேற்றக் கழகம் ஆன்மிகத்துக்கு எதிரானதல்ல!

## மு. க. ஸ்டாலின் தெரிவிப்பு



*சென்னை, மே 26*

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சி ஆன்மிகத்திற்கு எதிரானது அல்ல என்று சேலத்தில் நடைபெற்ற ஓராண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டதில் நடைபெற்ற தி. மு. க. அரசின் ஓராண்டு சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் உரையாற்றினார்.

அப்போது ஆன்மிகத்திற்கு எதிராக எழுந்த சர்ச்சை குறித்து பேசிய அவர், தி. மு. க. ஆட்சி ஒருபோதும் ஆன்மிகத்திற்கு எதிரான கட்சியாக இருந்ததில்லை - இருக்கப்போவதுமில்லை.

ஆன்மிகத்தின் பெயரால் தி. மு. க. ஆட்சி மீது சிலர் குறை சொல்ல தொடங்கியுள்ளனர். குறை சொல்வதற்கு ஏதும் இல்லாததால், ஆன்மிகத்தின் பெயரால் ஆட்சி மீது அவதூறு சொல்கிறார்கள். திராவிட மொடல் எதையும் இடிக்காது, உருவாக்கும். யாரையும் புறக்கணிக்காது, அரவணைக்கும்.

தி. மு. க. கொடுத்த வாக்குகளை மக்கள் மறந்தாலும், நான் மறக்கமாட்டேன். தமிழக மக்களுக்காக என் சக்தியையும் மீறி உழைப்பேன் - என்றார். (ஐ)

# சிவகங்கையில் புழக்கத்தில் இலங்கை ரூபாய்

*சிவகங்கை, மே 26*

இலங்கை யில் பொருளாதார நெருக் கடி நிலவி வரும் சூழலில் அங்கிருந்து அகதிகளாக வருபவர்கள் மூலம் அந்த நாட்டின் பணம் சிவகங்கை - திருப்புவனத் தில் புழக்கத்துக்கு வந்துள்ளது.



இலங்கை அராசங்கத்தால் தமிழ், சிங்களம், ஆங்கிலத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட 5 ரூபாயே அங்கு புழக்கத்துக்கு வந்துள்ளது. இந்திய ரூபாய்க்கும், இலங்கை ரூபாய்க்கும் இடையே பெரிய பெரிய வித்தியாசம் இல்லாததால் பலரும் 5 ரூபாய் நாணயக் குற்றியை வாங்கிப் பயன்படுத்துகின்றனர் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# சந்தன மரக்கடத்தல் வீரப்பனின் சகோதரர் மாதையன் உயிரிழப்பு

*சேலம், மே 26*

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் சகோதரர் மாதையன் உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

சேலம் அரசு மருத்துவமனையில் 24 நாட்கள் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்தாரென மருத்துவமனை நிர்வாகம் அறிவித்துள்ளது.

1987ஆம் ஆண்டு சத்திய மங்கலத்தில் ரேஞ்சர் சிதம்பரம் கொலை வழக்கில் சந்தன மரக் கடத்தல் வீரப்பனின் அண்ணனான மாதையன் கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் இவருக்கு ஈரோடு நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தது.

கடந்த 35 ஆண்டுகளாக சிறையில் உள்ள மாதையன், இருதய நோய், மற்றும் சல ரோக நோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

உடல்நிலை சரியில்லாத நிலையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் இவரை விடுதலை செய்ய வேண்டும் என சில அரசியல் கட்சியினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்நிலையில் கடந்த மாதம் சிறைவிடுப்பில் வீடு சென்று திரும்பிய மாதையனுக்கு மீண்டும் உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் சேலம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்தார். (ஐ)

# கிளிநொச்சியில் புத்தக அரங்கவிழா

கிளிநொச்சி, மே 26

கிளிநொச்சியில் "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் மே மாதம் 27, 28, 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலையில் புத்தக அரங்க விழா இடம்பெறவுள்ளது.

இவ் விழாவின் ஆரம்ப நிகழ்வாக 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் ஈழத்தின் புகழ்பூத்த எழுத்தாளரும், விமர்சகருமான பேராசிரியர் சிவசேகரம் அவர்களின் 1973 - 2020 வரையான கவிதைகளின் தொகுப்பான "சிவசேகரம் கவிதைகள்" நூலின் அறிமுக நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவருமான எழுத்தாளர் க.தணிகாசலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் நூல் அறிமுக உரையினை சி. கருணாகரன் ஆற்றவுள்ளதுடன், கருத்துரையினைச் சட்டத்தரணி சோ.தேவராஜா ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோர் கருத்துரைகளும் கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து மாலை 6 மணியளவில் அரங்க விழா இடம்பெறும். இதில் நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் குழந்தை மா.சண்முகலிங்கத்தின் மொழிபெயர்ப்பில் பேராசிரியர் க.ரதிதரன் நெறியாள்கையில் உருவாகிய, ரஷ்ய நாடக மேதை அன்ரன் செகோவின் "தான் விரும்பாத் தியாகி", மற்றும் சண் நாடகக் குழுவினரின் தயாரிப்பில் பு.கணேசராஜாவின் எழுத்துரு, நெறியாள்கையில் "தலை எழுத்து" ஆகிய நகைச்சுவை நாடகங்களும் அரங்கு பற்றிய கலந்துரையாடலும் இடம்பெறவுள்ளன.

இவ் விழாவின் விசேட அம்சமாக தமிழில் அண்மையில் வெளிவந்த அநேக நூல்களுடன் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் மே 28, 29 சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மு.ப. 9 மணி தொடக்கம் பி.ப. 8 மணி வரை இடம்பெறவுள்ளது. புத்தகப் பண்பாட்டுப் பேரவையின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெறும் இக் கண்காட்சியில் கொள்வனவு செய்யப்படும் நூல்களுக்கு 10 - 30 சதவீதம் வரை விலைக் கழிவு வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் நாளான மே 28 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஈழத்து இலக்கியங்களை அறிவோம் என்ற தலைப்பில் புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வின் முதலாவது அமர்வு இடம்பெறவுள்ளது. இவ் அமர்வில் கருணாகரனின் "கடவுள் என்பது துரோகியாய் இருத்தல்" என்ற நூல் தொடர்பாக ச.சித்தாந்தன், தெய்வீகனின் "உன் கடவுளிடம் போ" என்ற நூல் தொடர்பாக இ.இராஜேஸ்கண்ணன், தமிழ்க்கவியின் "நரையன்" என்ற நூல் தொடர்பாக ப.தயாளன், இராஜேஸ் கண்ணனின் "கிராமத்து மனிதர்கள்" என்ற நூல் தொடர்பாக தமிழ்கவி, சித்தாந்தனின் "அம்ருதாவின் புதிர் வட்டங்கள்" என்ற நூல் தொடர்பாக கலாநிதி சு. குணேஸ்வரன் அறிமுக உரைகளை ஆற்றவுள்ளதுடன், அவற்றைத் தொடர்ந்து சபையோர் கருத்துரையும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

மூன்றாம் நாளான மே 29 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் புத்தகங்களின் அறிமுகமும் கலந்துரையாடலும் நிகழ்வின் இரண்டாவது அமர்வு இடம்பெறும். இவ் அமர்வில் அலெக்ஸ் பரந்தாமனின் "ஒரு பிடி அரிசி" என்ற நூல் தொடர்பாக திருநகரூர் ஜெகா, எஸ்தரின் "பெருவெடிப்பு மலைகள்" என்ற நூல் தொடர்பாக கு.ரஜீவன், சாந்தனின் "சித்தன் சரிதம்" என்ற நூல் தொடர்பாக மு.அநாதரட்சகன், செ.அன்புராசா அடிகளாரின் "கொரோனா ஊரடங்கு: நானும் என்னூர் நாய்களும்" என்ற நூல் தொடர்பாக மு.தமிழ்ச்செல்வன், தீபச்செல்வனின் "நடுகல்" என்ற நூல் தொடர்பாக கனக பாரதி செந்தூரன் அறிமுக உரைகளை ஆற்றவுள்ளனர். தொடர்ந்து சபையோர் கருத்துரையும் கலந்துரையாடலும் இடம்பெறும்.

குறித்த மூன்று தினங்களும் தேசிய கலை இலக்கியப் பேரவைக்கான உறுப்பினர் சேர்ப்பும் இடம்பெறவுள்ளது. முற்போக்கான மக்கள் கலை இலக்கிய முன்னெடுப்பில் அனைவரையும் இணையுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைப்புவிடுத்துள்ளனர். (அ)

# 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கின்றனர்!

## மன்னார் மாவட்ட மீனவர் சமாச தலைவர் தெரிவிப்பு

மன்னார், மே 26

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு பாரிய சிரமங்களை எதிர்நோக்கி உள்ளார்கள். ஆனால் இலங்கையில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் ஒரு ரூபாய் கூட தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு தானமாக வழங்க முன்வரவில்லை என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.**

மன்னாரில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நிதி நெருக்கடியால் இலங்கை மக்கள் படும் துன்ப துயரங்களை பார்த்து தமிழக உறவுகளால் எங்களுக்கு வழங்கிய அந்த உதவி நிச்சயமாக நினைத்து பார்க்க முடியாத-இதுவரை எந்த நாடுகளும் அமைப்புகளும் எமக்கு அள்ளித் தராத பெரிய தொகையை தமிழக மக்கள் ஒன்று சேர்த்து வந்திருக்கிறார்கள்.

அதற்கு முதற்கண் நாங்கள் நன்றியை கூறிக் கொள்ள விரும்புகிறோம்.

இது இன்று நேற்றல்ல பல வருடங்களாக யுத்த காலத்தில் இருந்து இதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எமக்கு அது நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது .

ஆனால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது கட்சி தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினராக 225 பேர் இங்கு இருக்கிறார்கள்.

இந்த அன்பளிப்பை அல்லது உதவியை பெற்றுள்ளமை குறித்து ஊடகங்கள் வாயிலாக மகிழ்ச்சிகளையும் நன்றிகளையும் தெரிவிக்கும் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கட்சி சார்ந்த அல்லது தாங்கள் சார்ந்த நிதியை இந்த அரசுக்கும் மக்களுக்கும் வழங்க முன்வர வில்லை.

நிச்சயமாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அவர்களின் கடந்த காலத்தோடு ஒப்பிடும்போது இன்றைய சொத்துக்களை எங்கிருந்து சேர்த்தார்கள்? உண்மையில் அரசியல் வாயிலாகத்தான் இந்த சொத்துக்களை அவர்கள் தேடி இருப்பார்கள்.

எனவே இன்று இலங்கையின் அவல நிலையை பார்த்து-பொருளாதார நெருக்கடியை பார்த்து இந்தியா தமிழக மக்களும் உதவும்போது ஏன் இங்கு உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ரூபாய் கூட உதவி செய்ய முடியவில்லை.

நிச்சயமாக இவர்களிடம் நிதி இருக்கிறது. கட்சி சார்ந்த பணங்களும் கோடிக்கணக்காக இருக்கின்றன. இவை கட்சி தலைமையகங்களில் அல்லது வங்கிகளில் முடங்கிப் போய்க் கிடக்கின்றன.

இன்றைய சூழலில் கூலி வேலை செய்யும் மக்கள் சாப்பாட்டுக்காக படும் துன்பத்தை அவர்கள் ஏறெடுத்து பார்க்கவில்லை. அவர்கள் பாராளுமன்ற உணவை உண்டு கொண்டு ஏ.சி. அறையில் சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

ஆனால் அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் ஒரு வேளை கஞ்சி குடிப்பதற்குக் கூட கஷ்டப்படுகிறார்கள். மா, சீனி உட்பட எந்த பொருளை எடுத்துக்கொண்டாலும் மூன்று மாதத்துக்கு முன் இருந்த நிலையை ஒப்பிடும்போது 3 மடங்கு விலை உயர்ந்து உள்ளது.

எனவே நான் யாரையும் சுட்டிக்காட்ட விரும்பவில்லை. நிச்சயமாக தங்களால் முடிந்த நிதியை இக்கட்டான பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் மக்களுக்காக வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்-என்றார். (அ)

# மே - 09 வன்முறை: 1,708 பேர் கைது 751 பேர் மறியலில்

கொழும்பு, மே 26

நாட்டில் மே - 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரையில் ஆயிரத்து 708 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று காலை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவர்களில் 751 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும், ஏனையோர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)



# யாழ் பல்கலைக்கழகத்தில் தாதியர் சத்தியப்பிரமாணம்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறிய தாதியர்களுக்கான சின்னம் சூட்டும் வைபவமும், சத்தியப் பிரமாணம் ஏற்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடாதிபதி திருமதி தெய்வி தபோதரன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, பதிவாளர் வி.காண்டீபன், யாழ்ப்பாண தாதிய பயிற்சிக்கல்லூரி அதிபர் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் விருந்தினர்களாகக் கலந்து கொண்டு தாதியருக்குச் சின்னங்களை அணிவித்தனர். (அ)

# புத்தளத்தில் பெண் வெட்டி படுகொலை!

கொழும்பு, மே 26

புத்தளம், வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மங்களப்புர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து பெண்ணொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவு குறித்து ஏற்பட்ட முரண்பாடொன்றின் காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸாரின் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக வண்ணாத்திவில்லுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# 140 லீற்றர் பெற்றோலுடன் ஓட்டோ சாரதி கைதானார்!

கொழும்பு, மே 26

பதுளை, ஹாலி- எல நகரிலிருந்து, ஊவா கெட்டவௌப் பகுதிக்கு சென்ற ஓட்டோவை, இடைமறித்து சோதனைக்குட்படுத்தியபோது 140 லீற்றர் பெற்றோல் கைப்பற்றப்பட்டது.

குறித்த ஓட்டோ சாரதி, கடந்த சில மாதங்களாக , அதிக விலைக்கு எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பதுளை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (அ)

# இந்தியா நன்கொடையாக வழங்கிய மருந்துகள் இன்று கொழும்புக்கு வரும்

கொழும்பு, மே 26

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை அடுத்து இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்படவுள்ள மருத்துவ உதவி தொகுதி இன்று இலங்கையை வந்தடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

200 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியான மருந்துகள் இந்தியாவினால் நன்கொடையாக வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு 25 தொன்களுக்கும் அதிகமான மருந்துகள் மற்றும் மருந்துப் பொருட்கள் இன்று கொழும்பை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# சுப்பர் டீசல், ஒக்ரேன் 95 பெற்றோல் தட்டுப்பாடு

கொழும்பு, மே 26

சுப்பர் டீசல் மற்றும் ஒக்டென் 95 ரக பெற்றோல் சந்தையில் நாளாந்த தேவையை விட 10 சதவீதம் குறைவாகவே காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனை வலுச்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இது குறைந்த விலையுடைய பொருட்களுக்கு செயற்கையான கேள்வியை உருவாக்கும் என அவர் தெரிவித்தார். (அ)

# புலம்பெயர் தமிழர் முதலீடு செய்தால் பொருளாதாரத்தை கட்டி எழுப்பலாம்!

## யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் உபதலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 26

**புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் மிகவும் பலமானவர்கள் தற்போது அவர்களின் சக்தியை நாங்கள் பயன்படுத்துகின்றபோது உண்மையில் நாட்டின் பிரச்னைக்கு தோள் கொடுக்கக்கூடியதாக இருக்கும். எமது பிரதேசத்தின் பொருளாதாரத்தையும் கட்டி எழுப்பக்கூடிய ஏதுவாக இருக்கும் என யாழ்ப்பாண வர்த்தக தொழில்துறை மன்றத்தின் உபதலைவர் விக்னேஷ் தெரிவித்தார். நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்- கல்விமான்கள், தொழில் துறையில் இருப்பவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், அரசியல்வாதிகள் என அனைத்து பிரிவினரும் ஒன்று சேர்ந்து இந்தப் பிராந்தியத்தின் அபிவிருத்தி முயற்சிக்காக தற்போதைய இக்கட்டான நிலையில் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய நிர்பந்தத்துக்குள்ளாக்கப்பட்டு இருக்கின்றோம். அந்த சமூகப் பொறுப்பை உணர்ந்து அனைவரும் ஒன்று சேர்ந்து செயல்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

உண்மையில் பொருளாதார பிரச்னையில் ஏனைய மாகாணங்கள், மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது நாங்கள் வெற்றி கொள்ள முடியும். உண்மையில் யுத்த காலத்தில் எமது புலம்பெயர் மக்களின் உதவிகள்தான் எம்மை தற்போது நிமிர்த்தியுள்ளது.

எனவே வெளிநாட்டில் உள்ள புலம்பெயர் மக்களின் முதலீடுகள் தேவையானவை. தற்போதைய காலம் அதற்கு ஏற்றதாக இல்லாது போனாலும் நிச்சயமாக இந்த பிரச்னையின் பின்னால் ஒரு சிறந்த எதிர்காலம் இலங்கைக்கு இருக்கின்றது.

கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும். எனவே இலங்கைக்கு நியாயம் கிடைக்கப் போகின்றது. வெளிநாட்டில் உள்ள புலம்பெயர்ந்துள்ள மக்கள் தமது வடபகுதியில் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் வடபகுதியின் பொருளாதாரத்தை மென்மேலும் மேம்படுத்த முடியும்-என்றார். (அ-03)

# 40 எரிபொருள் நிலையங்கள் நாடளாவிய ரீதியில் பூட்டு!

கொழும்பு, மே. 26

நாட்டில் 40 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த நிரப்பு நிலையங்களுக்கு கோரப்பட்டுள்ள அனைத்து எரிபொருளும் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஊழியர்களை மிரட்டி வாடிக்கையாளர்கள் எரிபொருள் பெற்றுக்கொள்ள மேற்கொண்ட நடவடிக்கை காரணமாகவே எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளதாக சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாம்புடுன்ன தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது இதுவரை 5 முறை தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

எரிபொருள் விநியோகத்தை முறையாக மேற்கொள்ள ஆதரவு வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் மூடப்படும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என பெற்றோலிய விநியோகஸ்தர்கள் சங்கத்தின் இணைச் செயலாளர் கபில நாம்புடுன்ன குறிப்பிட்டார். (அ)

# 70 மில்லியன் ரூபா மோசடி; நாமல் நீதிமன்றத்தில் ஆஜர்!

கொழும்பு, மே 26

ரக்பி விளையாட்டின் ஊக்குவிப்புக்காக என குறிப்பிட்டு "கிரிஷ்" என்ற நிறுவனத்திடம் இருந்து 70 மில்லியன் ரூபாவை பெற்று முறைகேடாக பயன்படுத்தியதாக குறிப்பிட்டு நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின்போது முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த முறைப்பாட்டை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி அழைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த முறைப்பாடு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சந்தேக நபரான நாமல் ராஜபக்ஷவும் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார்.

இதன்போது, இந்த வழக்கு தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி முறைப்பாட்டை அழைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

# பேருந்து கட்டண அதிகரிப்பு நேற்று முதல் அமுலாகியது

கொழும்பு, மே 26

எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து, நேற்று முதல் பஸ் கட்டணங்கள் 19.5 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 350 பிரிவுகளின் பயணக் கட்டணங்களை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

27 ரூபாவாக காணப்பட்ட குறைந்தபட்ச கட்டணம் 32 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

2,022 ரூபாவாக காணப்பட்ட சாதாரண சேவையின் ஆகக்கூடிய கட்டணம், 2,417 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டண அதிகரிப்புக்கு அமைய, கொழும்பிலிருந்து கண்டிக்கான சாதாரண சேவைக் கட்டணம் 457 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 760 ரூபாவாவும் உயர்த்தப்பட்டுள்ளது.

கொழும்பு முதல் யாழ்ப்பாணத்துக்கான சாதாரண சேவைக் கட்டணம் 1,438 ரூபாவாகவும், அரை சொகுசு சேவைக் கட்டணம் 1,799 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 2,400 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு முதல் நுவரெலியாவுக்கான சாதாரண சேவைக் கட்டணம் 711 ரூபாவாகவும், அரை சொகுசு சேவைக் கட்டணம் 888 ரூபாவாகவும், குளிரூட்டப்பட்ட சேவைக் கட்டணம் 1,185 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அதிகவேக நெடுஞ்சாலை பஸ்கள் மற்றும் அதிசொகுசு பேருந்துகளின் கட்டணங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஐந்து மாதங்களுக்குள் 22,419 பேருக்கு டெங்கு

கொழும்பு, மே 26

வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 22 ஆயிரத்து 419 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் 4,696 நோயாளர்கள் மே மாதத்தில் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இவ்வருடம் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த வருடத்தில் மொத்தமாக 24,942 டெங்கு நோயாளர்கள் மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

திருகோணமலை மாவட்டத்தின் டெங்கு நிலவரம் தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஏ.ஆர்.எம். தௌபீக் தெளிவுபடுத்தியுள்ளார். (அ)

# கிராம அலுவலர் கண்காணிப்பின் கீழ் பங்கீட்டு அட்டைக்கு எரிவாயு வழங்கல்

## யாழ்.மாவட்டத்தில் புதிய நடைமுறை

**யாழ்ப்பாணம், மே 26**

**எரிவாயு விநியோகம் பங்கீட்டு அட்டைக்கு பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவையாளரின் கண்காணிப்பின் அந்த அந்த பகுதி முகவர்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக எரிவாயு விநியோகத்தில் குழப்பங்கள் ஏற்பட்டு இருந்தன. இந்நிலையில் விநியோக நடவடிக்கைகளை குழப்பம் இன்றி மேற்கொள்வதற்காக நாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.



இவ்வாறு சிலிண்டர் விநியோக நடவடிக்கையில் பல நடைமுறை சிக்கல்கள் உண்டு. அவை தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம். கலந்துரையாடல்களின் முடிவில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டு , எரிவாயு சிலிண்டர் விநியோகம் குழப்பம் இன்றி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதனை குழப்பம் இன்றி முன்னெடுக்க அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

சிலர் கறுப்பு சந்தைகளில் அதிக விலைக்கு எரிவாயு சிலிண்டர்களை விற்பனை செய்வதாக எமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. அவை தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டவுள்ளன-என்றார். (அ)

# ஓ.எல். பரீட்சை முடிவடைந்த பின் சேவையிலிருந்து விலகும் பஸ்கள்!

கொழும்பு, மே 26

க.பொ.த சாதாரண தர பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர் பேருந்து சேவையில் இருந்து விலகுவதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இதனைத் தெரிவித்தார்.

சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் ஊழியர்கள் பஸ் ஒன்றுக்கு 100 லீற்றர் எரிபொருள் வழங்குவதற்கு 1000 ரூபாய் கப்பம் கோருவதன் காரணமாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். அதன்படி, முறையாக டீசல் வழங்க நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால் சாதாரண தர பரீட்சைக்கு பின்னர் பேருந்து சேவையில் இருந்து விலக தீர் மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (அ)

# அமரகீர்த்தி அத்துக்கோரளவின் உயிரிழப்பு: சம்பவத்துடன் தொடர்புள்ள நால்வர் கைது!

கொழும்பு, மே 26

பாராளுமன்ற உறுப்பினர் அமர கீர்த்தி அத்துக்கோரளவின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் நான்கு சந்தேக நபர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (அ)

# மே 9 வன்முறை குறித்து ஆராய விசேட ஜனாதிபதி ஆணைக்குழு

## சுயாதீன எம்.பிக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, மே 26

மே 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஆராய விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு, சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியுள்ளது.

கடிதம் ஒன்றில் மூலம், அந்த ஒன்றியத்தின் உறுப்பினர்களால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண உள்ளிட்ட 8 பேர் கையொப்பமிட்டு, குறித்த கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம், மே 09 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் குறித்து, இதுவரை ஆயிரத்து 708 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் 900 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள நிலையில், 751 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

# மதுசாரம், போதைப்பொருள் விழிப்புணர்வு; யாழ்.பல்கலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்!

யாழ்ப்பாணம், மே 26

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தொடர்பிலான சமூக விழிப்புணர்வை உருவாக்குவது பற்றிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையமும் கைச்சாத்திட்டுள்ளன.



இது தொடர்பான நிகழ்வு நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் சார்பில் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் புபுது சுமணசேகரவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில், கலைப் பீடப் பீடாதிபதி பேராசிரியர் கே. சுதாகர், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் கலாநிதி சி. ரகுராம், கலைப்பீடப் பிரதிப் பதிவாளர் திருமதி அனுஷா சிவனேஸ்வரன், ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் மதுசார மற்றும் போதைப்பொருள் தகவல் நிலைய சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட அதிகாரி ஏ.சி. ரஹீம் மற்றும் ஏனைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின்படி, மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனைக்கு எதிரான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் உருவாக்கும் செயற்பாடுகளில் யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இணைந்து கொள்ளவிருக்கின்றனர்.

குறிப்பாக, மக்கள் மத்தியில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனையினால் ஏற்பட்டுவரும் சமூகச் சிக்கல்கள் பற்றிய ஊடகங்கள் வழி விழிப்புணர்விற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்வதுடன், அது தொடர்பான ஊடகப்படைப்புக்களை உருவாக்கும் பணிகளிலும் அவர்கள் ஈடுபடுவர்.

அதேவேளை, இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனைக்கு எதிரான கருப்பொருளைக் கொண்ட குறும்படப் போட்டியும், செயலமர்வுகளும் மாணவர்களுக்கு நடாத்தப்படவுள்ளன. வட மாகாணத்தில் மதுசாரம், புகையிலை மற்றும் போதைப்பொருட்கள் பாவனையினை ஊக்குவிக்கும் ஊடகப் பண்பாடு பற்றிய ஆய்வுகளையும் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தின் தொழில்நுட்ப வழிகாட்டலில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி மேற்கொள்ளவுள்ளனர். (அ-3)

# சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 26

சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அவசியமான எரிபொருளை விநியோகிக்க விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

விவசாயப் பணிப்பாளர் நாயகத்தினால், 25 மாவட்டங்களையும் உள்ளீர்க்கும் வகையில் எரிபொருளை விநியோகிப்பதற்காக, தெரிவு செய்யப்பட்ட 217 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் பெயர்ப் பட்டியல் விவசாய அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக, விவசாயிகளுக்கு அவசியமான எரிபொருளை தொடர்ச்சியாக விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுடன் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, சிறுபோகத்துக்கு அவசியமான எரிபொருளை வழங்க வலுசக்தி அமைச்சர் இணங்கியதாக விவசாய அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# ராஜபக்ஷ குடும்பத்தை காப்பதா? மக்கள் சேவையில் ஈடுபடுவதா?

## அரசு முடிவு செய்யவேண்டும் என்கிறார் சஜித்

கொழும்பு, மே. 26

"சந்தர்ப்பவாத அரசியலைக் கடைப்பிடித்து ராஜபக்ஷ குடும்பத்தின் காவலராக மாறுவதா அல்லது கொள்கை அடிப்படையில் மக்கள் சேவையில் ஈடுபடுவதா என்பதை முடிவு செய்ய வேண்டும்."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.



ராஜபக்ஷ குடும்பத்தைப் பாதுகாக்கும் தலைமை செயல் அதிகாரியாகவோ அல்லது அதன் உறுப்பினராகவோ இருக்கத் தாம் ஒருபோதும் தயாராக இல்லை எனவும் அவர் கூறினார்.

திருட்டுகள் குறித்து கோப் குழுவில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இந்த அரசும் திருடர்களைப் பாதுகாப்பதையே மேற்கொள்கின்றது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (அ)

தமிழ்நாடு அரசியல்

- ஆ.விஜயானந்த்

# மாநிலங்களவை தேர்தல் :
# அ.தி.மு.க., காங்கிரஸ் வேட்பாளர் தேர்வில் தாமதம் ஏன்?



இந்திய நாடாளுமன்ற மாநிலங்களவை தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் தொடங்கிவிட்டாலும், வேட்பாளர்களை இறுதி செய்வதில் அ.தி.மு.க, காங்கிரஸ் முகாமில் தாமதம் நீடிக்கிறது. "அ.தி.மு.கவில் முன்னணி நிர்வாகிகள் பலரும் சீட் கேட்பதால் வேட்பாளர்களை தேர்வு செய்வதில் இழுபறி நிலையே நீடிக்கிறது" என்கின்றனர் அக்கட்சியின் மூத்த நிர்வாகிகள்.

**6 இடங்களுக்குப் போட்டி**

இந்தியாவில் 15 மாநிலங்களில் உள்ள 57 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் வரும் ஜூன் மாதம் நிறை வடைய உள்ளது. இதில், தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினர்களான டி.கே.எஸ்.இளங்கோவன், ஆர்.எஸ்.பாரதி, கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் ஆகியோரது எம்.பி பதவியும் அ.தி.மு.க தரப்பில் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன், நவநீத கிருஷ்ணன், விஜயகுமார் ஆகியோரது பதவிக்காலமும் முடிவடைய உள்ளது. தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்களின் பலத்தைப் பொறுத்து நான்கு இடங்கள் தி.மு.கவுக்கும் 2 இடங்கள் அ.தி.மு.கவுக்கும் கிடைக்க உள்ளன. வரும் ஜூன் 10ஆம் தேதி மாநிலங்களவை உறுப்பினர் தேர்தல் நடைபெற உள்ளதால் வேட்புமனுத் தாக்கல் மே 24 தொடங்கிவிட்டது.

மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட சில நாள்களில் தி.மு.க தரப்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலை அக்கட்சித் தலைமை அறிவித்துவிட்டது. அதன்படி, வழக்குரைஞர் கிரிராஜன், தஞ்சை கல்யாணசுந்தரம், கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் ஆகியோரது பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஓர் இடம் வழங்கப்பட்டாலும், அக்கட்சியின் சார்பில் போட்டியிடக் கூடிய வேட்பாளர் பெயர் அறிவிக்கப்படவில்லை. அ.தி.மு.க தரப்பிலோ, இரண்டு இடங்களுக்கான வேட்பாளர்கள் யார் என்பதை இறுதி செய்வதில் ஓ.பி.எஸ், இ.பி.எஸ் இடையே பெரும் குழப்பம் நிலவி வருவதாகக் கூறப்படுகிறது.





**அ.தி.மு.கவில் என்ன நடக்கிறது?**

எடப்பாடி பழனிசாமி தரப்பின் ஆதரவாளர்களாகப் பார்க்கப்படும் டி.ஜெயக்குமார், சி.வி.சண்முகம், செம்மலை, ஐ.எஸ்.இன்பதுரை, ராஜ் சத்யன் உள்ளிட்டோரும் ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் முன்னாள் எம்.பி மதுரை கோபாலகிருஷ்ணன், பரமக்குடி நகராட்சி முன்னாள் சேர்மன் கீர்த்திகா முனியசாமி, தேனி மாவட்ட அ.தி.மு.க செயலாளர் சையதுகான் ஆகியோரது பெயர்கள் ராஜ்யசபா வேட்பாளர் பட்டியலில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இதுதொடர்பாக, அண்மையில் அ.தி.மு.க தலைமை அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில், " உங்கள் தரப்பில் யார் என்ற பெயரைச் சொல்லுங்க?" என ஓ.பி.எஸ்ஸிடம் எடப்பாடி பழனிசாமி கேட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அவரும், விரைவில் தெரிவிக்க உள்ளதாகக் கூறியுள்ளார். இந்தக் கூட்டத்தில் எந்த முடிவும் எட்டப்பட வில்லை.

ராஜ்யசபா இடங்களைப் பொறுத்த வரையில், " வடக்கே வன்னியர், தெற்கே முக்குலத்தோர்" என இரு இடங்களையும் சாதி ரீதியாக கொடுப்பதற்கு அ.தி.மு.க தலைமை முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. "ஜெயலலிதா இறந்த பிறகு நடந்த முதல் ராஜ்யசபா தேர்தலில் வடக்கில் வேலூர் முகமது ஜானுக்கும் மேற்கில் மேட்டூர் சந்திரசேகருக்கும் சீட் கொடுக்கப்பட்டது. அடுத்து வந்த ராஜ்யசபா தேர்தலில் கே.பி.முனுசாமிக்கும் தம்பிதுரைக்கும் சீட் கொடுக்கப்பட்டது. இதனால் தெற்கு மண்டலம் முழுதாகப் புறக்கணிக்கப்பட்டது.

இந்தமுறையும் குறிப்பிட்ட இரு சமுதாயத்துக்கு என சீட் ஒதுக்கினால் இதர சமூகத்தினரின் வாக்குகளை அ.தி.மு.க இழக்க நேரிடும். குறிப்பிட்ட சாதிக்கான கட்சியாகவும் அ.தி.மு.க சுருங்கிவிடக் கூடாது. தவிர, சிறுபான்மையினர் மற்றும் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்தவர்களின் வாக்குகளை அ.தி.மு.க இழந்து வரும் சூழலில் அவர்களுக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். எனவே, தெற்கு மற்றும் டெல்டாவில் உள்ள பிற சமுதாயத்தினருக்கு உரிய வாய்ப்புகளை வழங்க வேண்டும்" என்ற குரல்களும் அ.தி.மு.கவில் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

அதேநேரம், "அ.தி.மு.கவில் உள்ள சீனியர்களில் யாருக்காவது ராஜ்யசபா சீட் கொடுத்தால், அடுத்து வரக்கூடிய சட்டமன்றத் தேர்தலில் அவர்களுக்கு சீட் கொடுக்கக் கூடாது" என்ற வாதமும் முன்வைக்கப்படுகிறது. காரணம், "கே.பி.முனுசாமி, வைத்திலிங்கம் ஆகியோர் தங்களுக்கு கிடைத்த ராஜ்யசபா பதவியை ராஜினாமா செய்துவிட்டு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டதுதான்" என்கின்றனர். "இதையெல்லாம் மனதில் வைத்து அ.தி.மு.க தலைமை முடிவெடுக்கலாம்" எனவும் கூறப்படுகிறது.

**தாமதம் ஏன்?**

"வேட்பாளர்களை அறிவிப்பதில் ஏன் தாமதம்?" என அ.தி.மு.க செய்தித் தொடர்பாளரும் வழக்குரைஞருமான பாபு முருகவேலிடம் கேட்டோம். "வேட்புமனுத் தாக்கல் தொடங்கிவிட்டாலும் வாபஸ் பெறுவதற்கு வரும் 3ஆம் தேதி வரையில் அவகாசம் உள்ளது. இன்னும் ஒன்பது நாள்கள் இருப்பதால் சரியான நபரைத் தேர்வு செய்து தலைமை அறிவிக்கும். தற்போது ராஜ்யசபா வேட்பாளர்களுக்கான தேடுதலில் தலைமை ஈடுபட்டுள்ளது" என்கிறார்.

தொடர்ந்து, கட்சிக்குள் நிலவும் சாதிரீதியான அணுகுமுறை குறித்து விளக்கமளித்தவர், "சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்ட இயக்கமாக அ.தி.மு.க உள்ளது. குறிப்பாக, என்னுடைய சமூகம் எது என்பதுகூட இ.பி.எஸ், ஓ.பி.எஸ் ஆகியோருக்குத் தெரியாது. ஆனால் எனக்குரிய முக்கியத்துவத்தை அவர்கள் கொடுத்து வருகின்றனர். இந்த சாதிக்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் எதுவும் இல்லை. இருவருமே சேர்ந்து சிறப்பான முடிவை எடுக்க உள்ளனர். அவர்கள் இருவருக்குள்ளும் எந்தவித போட்டியோ, தேடுதலில் சிரமங்களோ இல்லை. இன்னும் ஓரிரு நாள்களில் வேட்பாளர் பட்டியல் வெளியாகிவிடும்" என்கிறார்.

"அ.தி.மு.கவில் வன்னியர்களும் தலித்துகளும் பெரும்பான்மையாக உள்ளனர். வன்னியர், முக்குலத்தோர் ஆகிய சமூகங்களுக்கு தனித்தனியாக கட்சிகள் இருந்தாலும் அங்கு யாரும் செல்லவில்லை. அனைத்து சமூகங்களுக்கும் பொதுவான கட்சியாக அ.தி.மு.க இருப்பதால் இங்கு இருப்பதையே பலரும் விரும்புகின்றனர். தற்போது எதிர்க்கட்சியாக இருப்பதால் நாடாளுமன்றத்தில் வலுவான பிரதிநிதி தேவை எனத் தலைமை கருதுகிறது. அதனால்தான் பட்டியலை வெளியிடுவதில் தாமதம் ஏற்படுகிறதே தவிர, கட்சிக்குள் எந்தவித சிக்கல்களோ குழப்பங்களோ இல்லை" என்கிறார் பாபு முருகவேல்.

**காங்கிரஸ் கட்சியில் என்ன நடக்கிறது?**

இதையடுத்து, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஓர் இடத்துக்கான வேட்பாளரை அறிவிப்பதிலும் தாமதம் ஏற்பட்டு வருகிறது. இந்தமுறை, ப.சிதம்பரம், கே.எஸ்.அழகிரி உள்பட சீனியர்கள் பலரும் ராஜ்யசபா சீட் கேட்டுள்ளனர். "இதில் யாராவது ஒருவருக்கு சீட் கிடைப்பதற்கு வாய்ப்புள்ளது" எனவும் காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பேசி வருகின்றனர்.

"ராஜ்யசபா தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் மே 24ல் தொடங்கியுள்ளது. தேசியக் கட்சியாக இருப்பதால் அனைத்து மாநிலங்களிலும் உள்ள சூழல்களைக் கவனித்து தேர்வு செய்வதால் தாமதம் ஏற்படத்தான் செய்யும். மாநில கட்சிகளைப் போல நாங்கள் முடிவெடுக்க முடியாது. இன்னும் 2 அல்லது 3 நாள்களில் அறிவிப்பு வெளியாகிவிடும்" என்கிறார், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநிலத் துணைத் தலைவரும் ஊடகப் பிரிவின் தலைவருமான ஆ.கோபண்ணா.



ஈழநாடு



# பஸில் ராஜபக்ஷவின் மறைமுக ஆட்சி ஆபத்து!

- ரங்க ஜெயசூரிய



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ராஜபக்சக்களின் சொத்தாக விளங்கும் சிறிலங்கா பொதுஜன பெர முனவின் தயவிலேயே இயங்க வேண்டியிருக்கும் என்று நான் ஏற்கெனவே கூறியிருந்தேன். இந்த அரசாங்கம் மக்கள் போராட்டத்துக்கு முன்னர் நிலவிய பழைய இலங்கை அரசியலின் இயல்புதிரிந்த ஒரு கேலிச்சித்திரம் போன்றே காணப்படுகிறது. பொதுஜன பெரமுன இப்போது அபகீர்திக்குள்ளாகி வலுவிழந்த ஒரு சக்தியாகும். என்றாலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டதாக அது விளங்குகிறது. மக்களின் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலக நிர்ப்பந்திக்கப்பட்ட பின்னரான ஏற்பாடுகள் அவரும் சகோதரர்களும் பதிலாளை வைத்து (proxy) மறைமுகமாக ஆட்சி செய்வதாகவே அமைந்திருப்பது ஒரு முரண்நகையாகும். கூத்தாட்டு பொம்மையை இயக்குபவர் சகோதரர் பசில் ராஜபக்சவே.

பல கட்சி கருத்தொருமிப்பின் மூலமாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான ரோஹினி கவிரத்னவை பிரதி சபாநாயகராக நியமிப்பதற்கு விக்கிரமசிங்க கொண்டிருந்த திட்டத்தை முறியடித்து கடந்தவாரம் பசில் தனது கைவரிசையை காட்டினார். ரோஹினி நியமிக்கப்பட்டிருப்பாரேயானால் இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் பிரதி சபாநாயகர் பதவியில் அமர்ந்த முதல் பெண்மணி என்ற வரலாற்றுப் பெருமைக்கு உரியவராகியிருப்பார். அதற்கு இணங்கியிருந்தால் பொதுஜன பெரமுனவுக்கு ஒரு கௌரவமாகவும் இருந்திருக்கும். ரோஹினியின் பெயருக்கு ஜனாதிபதி கோதாபய ராஜபக்சவின் அங்கீகாரமும் கிடைத்திருந்தது. பொதுஜன பெரமுன முக்கியஸ்தரான தினேஷ் குணவர்தன, பிரதி சபாநாயகர் பதவிக்கு கருத்தொருமிப்பின் அடிப்படையிலான வேட்பாளராக ரோஹினி வருவதை ஜனாதிபதி விரும்புகிறார் என்பதை கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தெரியப்படுத்தவும் செய்தார். ரோஹினி அவ்வாறு நியமிக்கப்பட்டிருந்தால் பாராளுமன்றத்தில் கட்சிகள் மத்தியில் ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது என்பது போன்ற ஒரு தோற்றப்பாடும் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் பசில் வேறு கணக்கைப் போட்டார். அவரது அந்தரங்க ஏற்பாட்டில் பொதுஜன பெரமுன அதன் அம்பாந்தோட்டை மாவட்ட எம்.பி.க்களில் ஒருவரான அஜித் ராஜபக்சவை பிரதி சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக நியமித்தது. இரகசிய வாக்கெடுப்பில் அவர் 109 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார். ரோஹினிக்கு 78 வாக்குகள் கிடைத்தன.

பசிலின் வேட்டு பொதுஜன பெரமுனவை ஜனாதிபதி ராஜபக்ச சௌகரியமான முறையில் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார் என்று இருந்திருக்கக்கூடிய எந்த எண்ணத்தையும் தகர்த்துவிட்டது. ராஜபக்ச குடும்பத்தின் கடைசி ஆளாக அதிகாரப்பதவியில் இருக்கும் ஜனாதிபதி கோதாபய தன்னை மேலும் சில மாதங்கள் பதவியில் தொடரவிட்டால் பிறகு மானத்தைக் காப்பாற்றிக்கொண்டு பதவியில் இருந்து விலகுவதற்கு வழங்கப்படக்கூடிய வாய்ப்புக்காக அவரது குடும்பம் நீண்டகாலமாக பேணி வளர்த்த வம்ச ஆட்சி அபிலாசைகளை தியாகம் செய்யத் தீர்மானித்திருக்கிறார் போல் தோன்றியது.

ராஜபக்சாக்கள் சகலருக்குள்ளும் மிகவும் சர்ச்சைக்குரியவரான பசில்தான் தற்போதை நிலைவரம் மாற்றமடைந்தால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகக்கூடியவர். அரசாங்கத்தை சுதந்திரமாக ஆட்சி செய்யவிட்டால் பசில் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்கள் பலவற்றின் மீதான விசாரணைகள் துரிதப்படுத்தப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறது. ராஜபக்சாக்களுக்கும் அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கும் எதிரான பெருவாரியான வழக்குகளை சட்டமா அதிபர் வாபஸ் பெற்றிருக்கிறார்.

பசிலும் திருக்குமார் நடேசனும் பணச்சலவைக்கு எதிரான சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டப்படுவதற்கு காரணமான மல்வானை மாளிகை வழக்கில் பிரதான சாட்சி கீழ் நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை பின்னர் மறுத்துரைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் நீதித்துறையில் இருக்கும் ராஜபக்ச சார்பானவர்களும் உயர் பதவி அதிகாரிகளும் நிலைவரம் மாறுவதை உணருகிறார்கள். தவறுகளை உணர்ந்து திருந்திநடப்பதற்கு இவர்களை நிர்ப்பந்திப்பதற்கு அமைதிவழிப் போராட்டங்கள் போதாதென்றால் சீற்றமடைந்த மக்கள் வன்முறையில் ஈடுபட்டது பயனைத்தந்திருக்கிறதுபோலும். ஆனால் அலையை தன்னால் தடுக்க முடியாவிட்டாலும் ஓரளவு தணிக்க முடியும் என்று பசில் நினைக்கிறார் போல் தோன்றுகிறது.

இது ஆபத்தான ஒரு சூதாட்டம் அவருக்கு மாத்திரமல்ல. பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றப் பெரும்பான்மையைப் பயனபடுத்தி அரசாங்கத்தை பணயம் வைக்க அவர் முயற்சித்தால் பாராளுமன்றத்திற்கு எஞ்சியிருக்கக்கூடிய நியாயப்பாட்டுக்கும் அது ஆபத்தானதாக அமையும்.

அடுத்துவரும் நாட்கள் பல நிகழ்வுகளைக் காணப்போகின்றன. அரசியலமைப்புக்கான 21வது திருத்தம் திங்களன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. புதிய திருத்தம் 19வது திருத்தத்தை மீளக்கொண்டு வரும் சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு அதிகாரமளிக்கும். இரட்டைப் பிரஜாவுரிமையுடையவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகளை வகிக்கமுடியாது என்ற ஏற்பாட்டையும் அது மீளக்கொண்டுவரக்கூடும். அது சட்டமாக வந்தால் முதலில் பாதிக்கப்படப்போகிறவர் பசில்தான்.

பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் அதிகப்பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருக்கிறது. ஆனால் அதன் எம்.பி.க்கள் சகலரும் பசில் சொல்கிறபடி நடக்கிறவர்கள் அல்ல. அஜித் ராஜபக்சவுக்கு பாராளுமன்றத்தில் வாக்களித்த எம்.பி.க்களின் (109) எண்ணிக்கைதான் பசிலின் பலம் என்று கணிப்பிடுவதாக இருந்தால் அது 21வது திருத்தத்தை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கப் போதுமானதல்ல. எண்கணிதத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குவோமேயானால், பசிலுக்கு விசுவாசமான பிரிவினரும் கூட திருத்தச்சட்டமூலத்தை தோற்கடிக்க முயற்சிக்காமல் இருக்கக்கூடும். ஆனால் அவர்கள் அந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகளை தளர்த்துவதற்கு அல்லது தாமதிப்பதற்கு முயற்சிக்கக்கூடும். இதற்காக அவர்கள் சில சலுகைகளை அரசாங்கத்திடம் பிரதியுபகாரமாக எதிர்பார்க்கவும் கூடும்.

பசிலின் சூழ்ச்சியால் 21வது திருத்தம் தோற்கடிக்கப்படுமானால் அது பாராளுமன்றத்தின் நம்பகத்தன்மையைப் பொறுத்தவரை பரந்தளவிலான தாக்கத்தை ஏற்படுத்தும். அண்மைய வன்முறைகளில் வீடுகளை இழந்த பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் மீண்டும் மக்களின் சீற்றத்துக்கு ஆளாவது குறித்து ஒரு தடவைக்கு பல தடவைகள் சிந்திப்பார்கள்.

21வது திருத்தத்தின் கீழ் பொதுப் பதவிகளை வகிப்பதில் பசிலுக்கு வரக்கூடிய தகுதியின்மை பொதுஜன பெரமுன எம்.பி.க்களின் எண்ணிக்கை பெரும்பான்மை மீதான பசிலின் பிடியை தளர்த்திவிடும் என்றும் இல்லை. அந்த எம்.பி.க்களின் பொதுவான இயல்பு ராஜபக்சாக்கள் மீதான அடிமைத்தனமான விசுவாசமேயாகும்.

அந்த எம்.பி.க்கள் குறிப்பாக மோசமான அடிவருடிகளாக இருப்பவர்கள் ராஜபக்சாக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வரும் அதிசயத்தை நிகழ்த்திக்காட்டுவார்கள் என்று நம்பக்கூடியவர்கள். அதனால் பசில் பாராளுமன்றத்தில் இருக்கிறாரோ இல்லையோ பொம்மைகளை ஆட்டுவிப்பதில் அவரின் ஆற்றல் குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக தான் இப்போது அனுபவிக்கும் வரப்பிரசாதமான நிலை தொடரவேண்டும் என்பதே அவர் அக்கறைப்படக்கூடிய பிரதான சலுகையாக இருக்கக்கூடும்.

அத்தகையதொரு நிலைமை அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்களைப் பொறுத்தவரை எருதுக்களுக்கு சிவப்புத்துணியை காட்டுவது போன்றதாகும். நல்லாட்சி அரசாங்க காலத்தில் முன்னர் பிரதமராக இருந்தபோது விக்கிரமசிங்க ராஜபக்சாக்கள் விடயத்தில் மென்மையாக நடந்துகொண்டார்ஆனால் இத்தடவை அவரின் தந்திர விளையாட்டுக்களுக்கு பெரிதாக இடமில்லை. இலங்கையர்களின் பெரும்பாலானவர்கள் அவரை சந்தேகத்துடன் பார்ப்பது மாத்திரமல்ல,ஏளனமும் செய்கிறார்கள். ஓரளவு நம்பகத்தன்மையை அவர் பெறுவதற்கு ஒரு வழி உடனடி ஜனநாயக சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்துவதேயாகும். அவ்வாறு செய்தாலும் கூட பாராளுமன்றத்தில் பசிலின் பிரிவுக்கும் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் இடையில் எதிர்காலத்தில் முரண்பாடுகள் தோன்றுவதற்கு சாத்தியம் இருக்கிறது.

இது ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டுக்கு நம்பகத்தன்மையை கொடுக்கலாம். சகல கட்சி அரசாங்கத்தில் பங்கேற்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)யும் தொடர்ச்சியாக காட்டிவரும் மறுப்பில் கட்சி அரசியல் நலன் கணிப்பீட்டு வாடைவீசுகிறது. இருந்தாலும் பொதுஜன பெரமுன தொடர்ந்தும் விக்கிரமசிங்கவின் காலை வாரிக்கொண்டிருந்தால் அந்த இரு கட்சிகளின் நிலைப்பாடுகள் நம்பகத்தன்மையை பெற வாய்ப்பு இருக்கிறது. அரசாங்கத்துக்கு கஷ்டத்தை கொடுப்பதற்கு பசில் விரும்பக்கூடியதைப் போன்றே அரசாங்கம் தோல்வி காண்பதை சஜித்தும் அவரின் கட்சியும் விரும்புவார்கள்.

கோதாபய உரியகாலத்தில் பதவியில் இருந்து விலகிவிடவேண்டும். ஆனால் அவரது விலகல் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கப் போவதில்லை. பிரதமராக விக்கிரமசிங்கவின் நியமனமும் பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்கப்போவதில்லை. மக்களை வதைக்கும் இந்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இலங்கைக்கு ஒரு அரசியல் உறுதிப்பாட்டு தோற்றம் தேவையாகிறது. ஒரு நம்பகத்தன்மையான நிலையில் இருந்துகொண்டுதான் கடன் மறுசீரமைப்பு பேச்சு வார்த்தைகளை தொடரமுடியும்.

பசில் ராஜபக்ச பிரிவினரின் பாராளுமன்றப் பெரும்பான்மையால் பணயக்கைதியாக வைத்திருக்கப்படக்கூடாய ஒரு அரசாங்கம் சர்வதேச நிதிநிறுவனங்களினதும் வெளிநாட்டு அரசாங்கங்களினதும் நம்பகத்தன்மையான ஒரு பங்காளியாக தென்படமுடியாது. பழைய ஊழல்தனமான ஆட்சிமுறையினால் சலித்துப்போய் விட்ட இலங்கையர்களும் பதிலாள் மூலமான மறைமுக ஆட்சியை சகித்துக் கொள்ளப்போவதில்லை. அத்தகைய தொரு நிலை உருவாகினால் பாராளுமன்றத்துக்கு வெளியிலேயே பிரச்சினை தீர்க்கப்படும். அந்த நிலை உருவாவதை யாரும் விரும்பலாகாது.



(டெய்லி மிரர்)

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |
| **60.** | பொருத்தமான வாக்கியங்கள் | | | | |

### கல்வி tv CHANNEL-1

**26.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி tv CHANNEL - 2

**26.05.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |





# நாவிதன்வெளியில் மினி சூறாவளி!

## வீடுகள், வணக்கஸ்தலங்கள் வர்த்தக நிலையங்கள் சேதம்

அம்பாறை, மே. 26

**அம்பாறை மாவட்டம் மத்தியமுகாம் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை வீசிய மினி சூறாவளி மற்றும் மழை காரணமாக பொதுமக்களின் வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் உட்பட பல்வேறு கட்டடங்களின் கூரைகள் பறந்ததுடன் மரங்களும் சரிந்து விழுந்துள்ளன.**

பிற்பகல் 03 மணியளவில் இடம்பெற இந்த அனர்த்தம் காரணமாக கடுமையான சேதங்களை மக்கள் சந்தித்துள்ளனர்.

மத்தியமுகாம், இரண்டாம் வட்டாரம், மூன்றாம் வட்டாரம், சவளக்கடை, நான்காம் காலனி, ஆகிய இடங்களிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வீடுகளுக்கு முன்னால் நின்ற மரங்கள் காற்றுக்கு ஈடுகொடுக்க முடியாமல் சரிந்து விழுந்தமையினால் வீடுகளுக்கும் வீட்டின் கூரைகளுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள் ளது.

இதனால் அங்கிருந்து வெளியேறிய மக்கள் வேறிடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். இதனால் பலத்த பொருளாதார சேதம் ஏற்பட்டுள்ளது.

அரிசி ஆலைகளும், மேலும் பல வர்த்தக நிலையங்களும் இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ளமையினால் நெல் மற்றும் அரிசி மூட்டைகள் மழையில் நனைந்து பாவனைக்கு உதவாத வகையில் மாறியுள்ளதையும், மக்களின் வாழ்வியல் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

அதிகாரிகள் அவசரமாக நடவடிக்கை எடுத்து இது தொடர்பில் உரிய நஷ்டஈடுகளை பெற்றுத்தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



# தம்பலகாமம் பகுதியில் பஸ் - பாரவூர்தி விபத்து!

## 6 பேர் காயம்



திருமலை, மே. 26

திருகோணமலை, தம்பலகாமம் பகுதியில் பஸ் - பார வூர்தி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்ஸும் பார வூர்தியும் மோதியதில் 6 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து கொழும்பி நோக்கிச் சென்ற பஸ்ஸும், களனியை நோக்கிப் பயணித்த பாரவூர்தியும் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முதல் சைக்கிளில் கடமை

மட்டக்களப்பு, மே. 26

எரிபொருள் விலையேற்றம் மற்றும் எரிபொருள் இன்மை போன்ற பிரச்னைகளினால் மட்டக்களப்பு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முதல் தமது கடமைகளை சைக்கிளில் சென்று ஆற்றிவருகின்றனர்.

கடமை நேரத்திற்கு மேலதிக நேரம் பணி புரியும் இவர்களுக்கான மேலதிக கொடுப்பனவையும் அரசாங்கம் நிறுத்தியுள்ளது. இதனால் முழு நேரமும் மக்கள் நலனுக்காக சேவையாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் ஊழியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் மக்களுக்கான சேவையை தொடர்ந்து முன்னெடுப்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தின் பல இடங்களில் சுகாதார பரிசோதகர்கள் நேற்று முதல் தமது கடமைகளுக்கு சைக்கிளில் சென்றனர்.

கொரோனா தொற்று தற்போது நாட்டில் குறைவடைந்து வரும் அதேவேளை டெங்கு நோயின் தாக்கம் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# அயல் வீட்டாருடன் முரண்பாடு; கோடரி தாக்குதலில் ஒருவர் பலி!

அக்கரைப்பற்று, மே 26

பக்கத்து வீட்டுக்காரருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக ஒருவர் கோடரியால் கொத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அம்பாறை - அக்கரைப்பற்று - சின்னமுகத்துவாரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 33 வயதுடைய குணரட்ணம் குணதாசா என்பவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும், அவரின் அயல் வீட்டாருக்கும் இடையே நீண்டகாலமாக தகராறு இருந்தது. இது தொடர்பில் நீதிமன்றத்திலும் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணிக்கு இரு குடும்பத்தாருக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து அயல் வீட்டுக்காரர் உயிரிழந்த நபரை கோடரியால் தாக்கியுள்ளார். இதில் படுகாயமடைந்த குறித்த நபர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் 36 வயது நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன், தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட கோடரியையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மட்டக்களப்பில் ஓ.எல். பரீட்சை எழுதும் மாணவர்கள் சிலர் தடுக்கப்பட்டனர்!

## இது அரசமைப்பின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என்கிறது இலங்கை ஆசிரியர் சங்கம்

மட்டக்களப்பு, மே. 26

மட்டக்களப்பில் உள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டை வழங்கப்படாமல் தடுக்கப்பட்டுள்ளதாகவும் இது இலங்கையின் அரசியலமைப்பின் அடிப்படை உரிமையினை மீறும் செயற்பாடு என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் பொன்.உதயரூபன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் உள்ள மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,

நாட்டில் பல சிரமங்களுக்கு மத்தியில் கா.பொ.சாதாரண தர பரீட்சை நடைபெற்று வருகின்றது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்கள் பரீட்சையினை சவாலாக எடுத்து தோற்றியுள்ளனர்.

கடந்த காலத்தில் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்ட நிலையிலும் போக்குவரத்து பிரச்சினைகள் உட்பட பல்வேறு நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள நிலையிலும் மட்டக்களப்பு கல்வி வலயத்தில் உள்ள சில பாடசாலைகளில் சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் வழங்கப்படாமல் மாணவர்கள் பரீட்சை எழுதுவதற்கு தடுக்கப்பட்டமை இலங்கை அரசியலமைப்பின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் கருதுகின்றது. இது தொடர்பில் வன்மையான கண்டனத்தினையும் தெரிவித் துக்கொள்கின்றோம்.

மாணவர்களுக்கு கட்டாயக் கல்வி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இக்காலத்தில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடையாவிட்டாலும் தொழில்நுட்ப ரீதியான விசேட செயற்றிட்டங்கள் கல்வி கொள்கையில் உள்ளன.

இவ்வாறான நிலையில் இதற்கான முழுப்பொறுப்பினையும் மட்டக்களப்பு கல்விப்பணிப்பாளர் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (அ)



# கொலை முயற்சியில் உயிர் தப்பினார் புடின்!

கீவ், மே 26

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கொல்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் முயற்சி நடந்ததாகவும், அதில் அவர் தப்பித்தார் என்றும் உக்ரைன் இராணுவ உளவுப் பிரிவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் இரத்த புற்று நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், உக்ரைன் இராணுவ உளவுப்பிரிவின் தலைவர் கைரைலோ புடானோவ் கூறுகையில்,

ஐரோப்பா மற்றும் ஆசியாவுக்கு இடையே உள்ள கருங்கடலுக்கும், ரஷியாவின் கஸ்பியன் கடலுக்கும் இடையே உள்ள காகசஸ் என்ற இடத்தில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை கொல்ல முயற்சி நடந்தது.

பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடங்கிய பின் இந்த முயற்சி நடந்தது. இதில் புடினை குறிவைத்து தாக்குதல் நடந்தது. ஆனால், அவர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பி விட்டார் - என்றார் அவர். (ஐ)

# அமெரிக்காவின் ஆரம்பப் பள்ளியில் சிறாரைச் சுட்டுத் தள்ளிய இளைஞர்!

## இரு ஆசிரியர், 19 மாணவர்கள் பலி

வாஷிங்டன், மே 26

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உவால்டே என்ற இடத்தில் ஆரம்பப் பள்ளியில் இயந்திரத் துப்பாக்கியுடன் நுழைந்த 19 இளைஞர் சுட்டுத் தள்ளியதில் இரு ஆசிரியர்களும் 19 சிறுவர்களும் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் பாடசாலைகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற துப்பாக்கிச் சூட்டு வன்முறைகளில் மேலும் ஒரு மோசமான சம்பவமாக இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

சிறுவர்கள் சுடப்பட்ட செய்தி அறிந்த பெற்றோர்கள் பதறியடித்துக் கொண்டு பாடசாலை நோக்கி ஓடிய காட்சிகள் சமூகவலைத் தளங்களில் வெளியாகியுள்ளன.

சல்வடோர் ராமோஸ் என்று பெயர் குறிப்பிடப்படும் அந்த இளைஞர் தனது வீட்டில் இருந்து வெளியேற முன்பாக அங்கு வைத்து முதலில் தனது பேர்த்தியாரை சுட்டுத்தள்ளியிருக்கிறார். பின்னர், ஆரம்பப் பள்ளிக்குச் சென்று அங்கு வகுப்பறைகளில் புகுந்து சுட்டுள்ளார்.



சம்பவம் பற்றி அறிந்த எல்லைப் பொலிஸ் படைக் குழுவினர் பாடசாலைக்கு விரைந்து சென்று அந்த இளைஞரை சுட்டுக்கொன்றுள்ளனர். மோதலில் பல வீரர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது.

அதே நகரில் உள்ள உயர்தரப் பள்ளி ஒன்றின் மாணவனான அந்த இளைஞர் குண்டு துளைக்காத கவச ஆடை அணிந்த நிலையில் கைத்துப்பாக்கி மற்றும் ஓர் இயந்திரத் துப்பாக்கி கொண்டு தாக்குதலை நடத்தியுள்ளார். அந்த இரு துப்பாக்கிகளும் அனுமதிப் பத்திரம் பெறப்பட்ட ஆயுதங்கள் என்று கூறப்படுகிறது.

பள்ளியில் வெறியாட்டம் புரிவதற்கு முன்பாகத் தனது இன்ஸ்ட்ராகிராம் தளத்தில் துப்பாக்கிகளுடன் வெளியிட்ட படத்தில் யுவதி ஒருவரைக் குறிப்பிட்டு தான் புரியப் போகும் செயலை அந்தப் பெண்ணுக்கு உணர்த்தும் விதமாக செய்தி பரிமாறியுள்ளார் என்று கூறப்படுகிறது.

அமெரிக்கப் பாடசாலைகளில் இந்த ஆண்டு மட்டும் இதுவரை இது போன்ற 27 சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடந்த 2012 இல் கொனெற்றிக்கட்டில் சண்டி ஹூக் என்ற ஆரம்பப் பாடசாலையில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர்.

அதன் பிறகு நடந்த மிக மோசமான சம்பவம் இதுவே. அமெரிக்கா எங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள இந்தச் சம்பவம் துப்பாக்கிக் கட்டுப்பாடுகள் விடயத்தின் மீது மீண்டும் நாட்டின் கவனத்தைக் குவித்துள்ளது. (ஐ)

# 21 போதை கடத்தல்காரர்கள் பொலிஸாரால் சுட்டுக்கொலை!

றியோ டி ஜெனிரோ, மே 26

பிரேசிலில் போதைப் பொருள் கடத்தல் கும்பலுக்கும் - பொலிஸாருக்கும் இடையே நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் போதைப் பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனக் கூறப்படும் 21 பேர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவர்களை தேடிப் பிடிக்க இடம்பெற்ற சோதனையின் போது றியோ டி ஜெனிரோவின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு சேரியில் இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை வெடித்தது. இந்தச் சண்டையிலேயே குறைந்தது 21 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனரென பொலிஸார் மற்றும் மருத்துவமனை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கும் - பொலிஸாருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் சிக்கி இந்தச் சம்பவங்களுடன் தொடர்பில்லாத பெண் ஒருவரும் உயிரிழந்தார்.




விலா க்ரூஸீரோ பகுதியில் அடர்த்தியான மரங்கள் நிறைந்த பகுதியில் உள்நாட்டு நேரப்படி செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியளவில் பொலிஸாருக்கும் - போதைப்பொருள் கடத்தல் கும்பலுக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச் சூட்டுச் சண்டை தொடங்கியது. இதையடுத்து சேரிப் பகுதியில் அச்சம் கலந்த பரபரப்பான சூழல் நிலவியது என அந்தப் பகுதி வாசிகள் சமூக ஊடகங்களில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, இந்த மோதலில் பொலிஸ் அதிகாரி உட்பட 7 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர் என்று பிரேசில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

றியோவின் மிகப்பெரிய போதைப்பொருள் கும்பலின் தலைவர்கள் விலா க்ருசிரோவில் மறைந்திருக்கின்றனரென உளவுத்துறையினர் அளித்த தகவல்களின் பிரகாரம் ஒரு ஹெலிகொப்டரின் உதவியுடன் பொலிஸார் அவர்களைக் குறி வைத்து தாக்குதல் நடத்தினர்.

இதன்போது இரு தரப்புக்கும் இடையே தீவிரமான துப்பாக்கிச் சண்டை நடந்தாக இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய படையினர் செய்தித் தொடர்பாளர் கேணல் இவான் பிளாஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

இந்த நடவடிக்கையில் போதைப்பொருள் கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களின் தானியங்கித் துப்பாக்கிகள், கைத்துப்பாக்கிகள், ஒரு கைக் குண்டு, அத்துடன் குற்றவாளிகள் பயன்படுத்திய கார்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனரெனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## குவாட் உச்சி மாநாடு:

# ஜப்பான் அருகே சீன, ரஷ்யாவின் போர் விமானங்களால் பரபரப்பு



ரோக்கியோ, மே 26

குவாட் உச்சி மாநாடு நடந்து வரும் வேளையில், ஜப்பான் நாட்டின் வான்பரப்பு எல்லைக்கு மிக அருகே சீனா மற்றும் ரஷ்ய நாட்டு போர் விமானங்கள் பறந்து சென்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பானில் நடக்கும் குவாட் உச்சி மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அவுஸ்திரேலிய பிரதமர் அந்தோனி அல்பானிஸ், ஜப்பான் நாட்டு பிரதமர் ஃபுமியோ கிஷிடா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்த மாநாட்டில் பிராந்திய பாதுகாப்பு குறித்து பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்தோ - பசுபிக் பெருங்கடலில் சீன தேசத்தின் ஆதிக்கத்தை குறைப்பது தொடர்பாகவும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், சீனாவும், ரஷ்யாவும் இணைந்து போர் விமானத்தில் கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த வேளையிலேயே ரஷ்யா, சீனாவின் போர் விமானங்கள் ஜப்பான் அருகே பறந்தன. எனினும், அவை ஜப்பானின் வான் பரப்புக்குள் அத்துமீறவில்லை. எனினும், இந்த சம்பவம் இராஜதந்திர மட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# மேலும் மூன்று நாடுகளில் குரங்கு அம்மை பரவல்!

ஜெனிவா, மே 26

ஐக்கிய அரபு எமிரேட்ஸ், செக் குடியரசு மற்றும் ஸ்லோவேனியா ஆகிய நாடுகளில் புதிதாக குரங்கு அம்மை தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டனர். இவற்றுடன் உலகில் குரங்கு அம்மை தொற்று உறுதி செய்யப்பட்ட நாடு களின் எண்ணிக்கை 21 ஆக அதிகரித் துள்ளது. சுமார் 100 பேர் வரை இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஐரோப்பா, அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட 18 நாடுகளில் ஏற்கனவே குரங்கு அம்மை தொற்று நோயாளர்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்த நோயின் முக்கிய அறிகுறிகளாக தொடர் காய்ச்சல் மற்றும் சொறி என்பன உள்ளன என்று சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர். (ஐ)

## ஐ. பி. எல். இருபது - 20 தொடர்:

# குஜராத் ரைட்டன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி!



கொல்கத்தா, மே 26

கொல்கத்தாவில் நடந்த முதல் தகுதி சுற்றுப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முதல் அணியாக தகுதி பெற்றது குஜராத் ரைட்டன்ஸ்.

ஐ. பி. எல். இருபது - 20 தொடரின் இறுதிச் சுற்று நேற்று முன்தினம் இரவு கொல்கத்தாவில் ஆரம்பமானது. முதல் தகுதிச் சுற்றுப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ், குஜராத் ரைட்டன்ஸ் அணிகள் பொருதின.

189 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய குஜராத் ரைட்டன்ஸ் அணிக்குப் போட்டியின் இரண்டாவது பந்திலேயே ஓட்டங்கள் ஏதும் எடுக்காமலே ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார் விரித்திமன் சஹா.

இதன்பின் ஷுப்மன் கில் உடன் இணைந்த மத்தியூ வேட் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் இணைந்து 70 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்தனர். ஓவருக்கு 10 ஓட்டங்கள் என்ற சராசரியில் ஓட்டங்களை சேர்த்துக்கொண்டிருக்கும்போது எதிர்பாராதவிதமாக கில் ரன் அவுட் முறையில் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த ஓவரில் மத்தியூ வேட்டும் 35 ஓட்டங்களுக்கு நடையைக் கட்டினார்.

அடுத்தடுத்து இரண்டு சரிவுகளை சந்தித்தாலும் அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யாவுடன் இணைந்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார் டேவிட் மில்லர். இருவரும் அதிரடியாக ஆடி, விரைவாக ஓட்டங்களை சேர்த்தனர்.

இறுதி ஓவரில் வெற்றிக்கு 16 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில், ஏற்கனவே அரைச்சதம் கடந்திருந்த டேவிட் மில்லர் பிரசித் கிருஷ்ணா வீசிய முதல் மூன்று பந்துகளையும் சிக்ஸருக்கு பறக்கவிட்டு வெற்றியை உறுதி செய்தார்.

இதன்மூலம் நடப்பு ஐ.பி.எல். தொடரில் முதல் அணியாக குஜராத் ரைட்டன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு நுழைந்தது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த மில்லர் 68 ஓட்டங்களும், ஹார்திக் பாண்ட்யா 40 ஓட்டங்களும் எடுத்திருந்தனர்.

ராஜஸ்தான் தரப்பில் பவுல்ட் மற்றும் மெக்காய் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, களத்தடுப்பைத் தெரிவு செய்தார். இதனால், ராஜஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணிக்காக ஜெய்ஸ்வால் மற்றும் பட்லர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். 3 ஓட்டங்கள் எடுத்து அரங்கத்துக்குத் திரும்பினார் ஜெய்ஸ்வால். அவரைத் தொடர்ந்து வந்த அணியின் தலைவர் சஞ்சு சாம்சன் 26 பந்துகளில் 47 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். படிக்கல் 28 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

மறுபக்கம் விளையாடிக் கொண்டிருந்த பட்லர் மிகவும் நிதானமாக விளையாடி வந்தார். 15 ஓவர்கள் முடிவில் 35 பந்துகளை சந்தித்து 37 ஓட்டங்கள் எடுத்திருந்தார் அவர். ஆனால், கடைசி ஐந்து ஓவர்களில் தனது ஆட்டத்தில் அப்படியே வேகத்தை கூட்டினார். டெத் ஓவர்களில் மட்டும் அவர் எதிர்கொண்ட 21 பந்துகளில் 52 ஓட்டங்களை எடுத்து அசத்தினார்.

ராஜஸ்தானின் இனிங்ஸ் நிறைவடைய ஒரே ஒரு பந்து எஞ்சியிருக்க ரன் அவுட் ஆனார். மொத்தம் 56 பந்துகளில் 89 ஓட்டங்களை எடுத்திருந்தார் அவர்.

20 ஓவர்கள் முடிவில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட்கள் இழப்பிற்கு 188 ரன்கள் எடுத்தது. குஜராத் அணி சார்பில் ஷமி, யாஷ் தயால், சாய் கிஷோர் மற்றும் ஹார்திக் பாண்ட்யா தலா ஒரு விக்கெட் வீழ்த்தி இருந்தனர். (ஐ)



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் போராடி வென்றார் சிமோனா!

பாரிஸ், மே 26

பிரபல வீராங்கனையான சிமோனா பிரெஞ்சு ஓப்பனின் முதல் சுற்றில் போராடி வெற்றி பெற்றார்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடக்கிறது.

இதில், நேற்று முன்தினம் நடந்த முதல் சுற்றுப் போட்டியில் பிரபல வீராங்கனையான ருமேனியாவின் சிமோனா ஹாலேப் ஜேர்மனியின் சொங்கை போராடித் தோற்கடித்தார்.

இந்தப் போட்டியில், முதல் செற்றில் 6-4 என்ற கணக்கில் சிமோனாவும், இரண்டவாது செற்றில் 6-1 என்ற கணக்கில் சொங்கும், மூன்றாவது செற்றில் 6-1 என்ற கணக்கில் சிமோனவும் வெற்றி பெற்றனர்.

மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் பெகுலாவும் வெற்றி பெற்றார். (ஐ)

# செசபிள் மாஸ்டர்ஸ் சதுரங்கம் அரையிறுதியில் பிரக்ஞானந்தா!



சென்னை, மே 26

செசபிள் மாஸ்டர்ஸ் ரேபிட் சதுரங்கப் போட்டியில் இந்தியாவின் பிரக்ஞானந்தா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இணையம் வழியாக நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் பிரக்ஞானந்தா, காலிறுதி சுற்றில் சீனாவின் வெய் யி-யை எதிர்த்து விளையாடினார். இதில், பிரக்ஞானந்தா 2.5-1.5 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி பெற்றார். 16 வயதான சென்னையைச் சேர்ந்த பிரக்ஞானந்தா அரையிறுதி சுற்றில் நெதர்லாந்தின் அனிஷ் கிரியை எதிர்கொள்கிறார்.

அனிஷ் கிரி தனது காலிறுதி சுற்றில் 2.5-0.5 என்ற கணக்கில் நோர்வேயின் ஆர்யன் தோரியை வீழ்த்தியிருந்தார். மற்றோர் அரையிறுதியில் உலகத் தரவரிசையில் முதலிடத்தில் உள்ள மேக்னஸ் கார்ல்சன், சீனாவின் டிங் லிரேனை சந்திக்கிறார். மேக்னஸ் கார்ல்சன் காலிறுதி சுற்றில் 2.5-0.5 என்ற கணக்கில் ஸ்பெயினின் டேவிட் அன்டன் குஜ்ஜாரோவை வீழ்த்தினார்.

# அதிக சம்பளம் பெறும் ஆஸியின் கம்மின்ஸ்!



சிட்னி, மே 26

அவுஸ்திரேலிய அணியில் பட் கம்மின்ஸ் அதிக சம்பளம் பெறுகிறார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

டெஸ்ட் அணியின் தலைவரான பட் கம்மின்ஸ் வருடத்துக்கு 18 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் 45 கோடியே 77 இலட்சம் ரூபாயை சம்பளமாகப் பெறுகிறார். இது தவிர, டெஸ்ட் அணியின் தலைவராக பணிபுரிவதற்காக அவ ருக்கு 2 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்கள் - சுமார் 5 கோடி இலங்கை ரூபாய் அவருக்கு வழங்கப்படுகின் றது.

இவருக்குப் பின்னர், அதிகம் சம்பளம் பெறும் வீரர்களாக ஹசில்வூட்டுக்கு இலங்கை ரூபாய் மதிப்பில் 32.4 கோடி ரூபாயும், டேவிட் வோர்ணர் 30.3 கோடி ரூபாயும், ஸ்ரீவ் ஸ்மித் 26.3 கோடி ரூபாயும் சம்பள மாகப் பெறுகின்றனர். (ஐ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
21 - 12 - 1961



மறைவு
23 - 05 - 2022

## கிருஸ்ணமூர்த்தி கதிர்காமு

புங்குடுதீவு 10ஆம் வட்டாரம் ஆலடிச்சந்தியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Ratingen, கனடா Toronto, சுவிஸ் Zürich ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட கிருஸ்ணமூர்த்தி கதிர்காமு அவர்கள் 23-05-2022 திங்கட்கிழமை அன்று சுவிஸில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற கதிர்காமு, பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற துரைசிங்கம், பாக்கியலெச்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,மோகனச்செல்வி (கனடா) அவர்களின் அன்புக் கணவரும், கனடாவைச் சேர்ந்த கிந்துயம், நிரோஜன், அனோஜன் ஆகியோரின் பாசமிகுதந்தையும்,கணேசமூர்த்தி(ஜேர்மனி),தணிகாசலம்(சுவிஸ்), கண்ணன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,மோகனதாஸ், மோகனகலா, மோகனராணி, மோகனசெல்வன், நகுலேஸ்வரி, மணிமாலா, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,கபில், கஜன் , நதியா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும்,சுவிசன், சுவீபன், ராகவி, அபிராமி, ஆர்த்திகன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைப் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரபடும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள்.

தொடர்புகளுக்கு:
**கணேசமூர்த்தி - சகோதரன்** Mobile : +491773507660
**தணிகாசலம் - சகோதரர்** Mobile : +41793617427
**கண்ணன் - சகோதரன்** Mobile : +41792182443

வளர்க மெய்ஞானம் வளர்க சமாதானம்



உன்னை நம்பு
தென்கயிலை உலக சமாதான ஆலயம்
50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு, யாழ்ப்பாணம்.



மகாசக்தி யோகம்
(முழுநல வாழ்விற்கான அற்புதப் பயிற்சிகள்)

இலங்யையில் முதல் தடவையாக இந்தியாவின்
தென்கயிலை உலக சமாதான ஆலயத்தின் மூலம்
இலவச யோகா தியானப் பயிற்சிகள்

இவ் யோகாப் பயிற்சிகள் மூன்று நாட்கள் இந்தியாவில் இருந்து வருகைதரும் ஞானாசிரியர்களினால் வழங்கப்படவுள்ளதுடன் அதற்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் நிறுவனர், உலக அமைதி தூதுவர் குருமகான் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இடம்:- கலாமுற்றம், இலக்கம் 15, றக்காவீதி, யாழ்ப்பாணம்
(புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் அருகில்)

திகதி:- 27.05.2022 முதல் 29.05.2022 வரை 3 நாட்கள்

நேரம்:- காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை

பயிற்சி வழங்கும் ஆசிரியர்: மெய்ஞானாசிரியர் K.S. சுந்தரராமன்
பொதுச்செயலர், உலக சமாதான அறக்கட்டளை, இந்தியா

மதிய உணவு, சிற்றுண்டிகள், பயிற்சி அனைத்தும் முற்றிலும் இலவசம்
(அனுமதி மட்டுப்படுத்தப்பட்டு உள்ளமையினால் மே 26 ஆம் திகதிக்கு முன் நேரில் அல்லது தொலைபேசி ஊடாகவோ பதிவு செய்யவும்)

தொடர்புக்கு:-
தென்கயிலை உலக சமாதான ஆலயம், இலங்கை கிளை,
50/9, ஓம் நமசிவாய வீதி, வைமன் தெரு,
யாழ்ப்பாணம்

தொலைபேசி இலக்கம்:-
ஆலயம்: 0212211209,
ஞானாசிரியர் ப.அச்சுதராஜா 0777607026
0763100224

# மரண அறிவித்தல்



## கதிரிப்பிள்ளை இளையதம்பி

தோற்றம்
11 - 08 - 1934

உதிர்வு
23 - 05 -2022

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு கொட்டாஞ்சேனையை வதிவிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை இளையதம்பி அவர்கள் 23.05.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை, பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்ற பொன்னுத்துரை, சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சிவசக்தி அவர்களின் அன்புக் கணவரும், சத்தியகலா(கொழும்பு), புஸ்பகலா (பிரித்தானியா), கதிர்வாசன்(பிரித்தானியா), சிவகலா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந் தையும்,ஜெகநாதன்(கொழும்பு), ரவீரதன் (பிரித் தானியா), சுகன்யா(பிரித்தானியா), சிவகுமாரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரரும்,

காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சிரோன்மணி, தங்கராசா- சிவசோதி, காலஞ்சென்ற தவராசா- புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கேசாந்தன்- சர்மி(பிரித்தானியா), டுசியந்தன்- துளசி (அவுஸ்திரேலியா), டினோதன் - ஜெகதா(பிரித்தானியா), செந்தூரன்- கிருத்திகா(பிரித்தானியா), மயூரன் (பிரித்தானியா), மதுரன்(பிரித்தானியா), பிரவீணா (பிரித்தானியா), பிரவீண்(பிரித்தானியா), பவித்திரன் (அவுஸ்திரேலியா), அபிநிதா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும்,செரூன்(பிரித்தானியா), அனியா(பிரித்தானியா), டியா(அவுஸ்திரேலியா), சேயோன்(பிரித்தானியா), ரேவா(பிரித்தானியா) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.05.2022 சனிக்கிழமை அன்று மு.ப 06:00 மணியளவில் No. 22, Esakkimuthu place pickerings road, colombo- 13 எனும் முகவரியில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 29-05-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 09:00 மணியளவில் மேற்கண்ட முகவரியில் இறுதிக்கிரியை நடைபெற்று பின்னர் ந.ப 12:00 மணியளவில் கொழும்பு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**சத்தியகலா ஜெகநாதன் - மகள்** Mobile : +94776305904
**புஸ்பகலா ரவீரதன் - மகள்** Mobile : +447709527237
**கதிர்வாசன் இளையதம்பி - மகன்** Mobile : +447963024562
**சிவகலா சிவகுமாரன் - மகள்** Mobile : +61425231416

தகவல்:
**கதிர்வாசன் இளையதம்பி**
**- மகன்**

## வெளிநாட்டு...

பயிற்சி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

திறமையான பணியாளர்களை வெளிநாட்டு வேலைவாய்ப்புச் சந்தைகளுக்கு உள்ளீர்க்கும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நிலவுகின்ற பொருளாதார பின்னடைவை எதிர்கொள்ளும் வகையில், அந்நியச் செலாவணி மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, திறமையான பணியாளர்களை உருவாக்குவதன் மூலம், உயர் ஊதியம் பெறும் தொழில்களுக்கான வாய்ப்புகளை அதிகளவில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஐரோப்பா உட்பட பல நாடுகளில் தாதியர் சேவைகளுக்கு அதிக தேவை உள்ளது. ஜப்பானில் மட்டும் முதியோர் பராமரிப்பு மற்றும் உணவு விநியோகம் சார் துறையில் 350,000 க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் இருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் சுட்டிக்காட்டுகிறது. இதற்கு ஜப்பானிய மொழி அறிவு கட்டாயம்.

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை, தொழிற்பயிற்சி அதிகாரசபை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் உள்ளிட்ட அரச மற்றும் தனியார் துறைகளின் பங்களிப்புடன் ஜப்பானிய மொழி அறிவை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்தார்.

தற்போது அரச சேவையில் உள்ள எந்தவொரு நபரும் அல்லது பல்நோக்கு வேலைத்திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஒரு ஊழியர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்குச் செல்வதற்கு உள்ள தடைகளை நீக்குவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதில் சிரேஷ்டத்துவத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுஷ நாணாயக்கார தெரிவித்துள்ளார். (ஐ)

## 1990ஐ...

சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

அண்மையில், எரிபொருள் உடனடியாகக் கிடைக்காமையால் 2 வயது குழந்தை ஒன்று உயிரிழந்தது. இதையடுத்தே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஐ)

## அத்தியாவசிய...

கள் அமைச்சின் செயலாளர் எம். எம். பி. கே. மாயதுன்னை சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அரசாங்க செலவினங்களை நிர்வகிப்பதற்கும், மின்சாரம் மற்றும் எரிபொருளை சேமிப்பதற்காகவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எது எப்படி இருப்பினும் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் அத்தியாவசிய சேவைகளை கொண்டு நடத்துவதற்கு தடையாக இருக்கக்கூடாது என்றும் அமைச்சின் செயலாளர் கூறியுள்ளார். (ஐ)

## எரிவாயு...

எரிவாயுவை விற்பனை செய்ய முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

எது எப்படி இருப்பினும், தற்போது 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் நிர்ணய விலை 4,860 ரூபாய் என்ற போதிலும் விற்பனை முகவர்கள் 5,000 ரூபாய்க்கே விற்பனை செய்யப்படுவதாக மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இதேவேளை, இன்றைய தினமும் எரிவாயு விநியோகம் நடைபெறாது என்று லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது. (ஐ)

## இந்தியா...

பெற்றது. இதைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், இந்தியாவிலிருந்து வரும் பொருட்கள் அருகில் உள்ள காங்கேசன் துறை துறைமுகத்தை தாண்டி பல தூரம் கொழும்பு செல்கிறது காங்கேசன்துறை துறைமுகத்தில் இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு இந்திய அரசாங்கத்தால் உரம் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் உறுதியளித்தார்.

## யாழ்ப்பாணத்...

பர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று அவர் செய்தியாளர்களை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

மேலும், பால்மாவைப் பொறுத்த வரையில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த கர்ப்பவதித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கும் சிறு குழந்தைகளை வைத்திருக்கும் குடும்பங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்.

இதேசமயம், மீனவர்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க இந்தியா வழங்கவுள்ள 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெயை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அது மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு பகுதி மீனவர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்படும்.

மீனவர் சங்கங்கள், கடற்றொழில் திணைக்களங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்படும். சுமார் 705 மீனவர்கள் இதன் மூலம் நன்மை பெறுவர் என்றும் அவர் கூறினார்.

இதுதவிர, வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. தற்போது வழங்கப்படும் தொகைக்கு மேலதிகமாகவே இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம், யாழ்ப்பாண மாவட்டத்தில் 78 ஆயிரத்து 442 சமுர்த்தி பெறும் குடும்பங்களும் 27 ஆயிரத்து 978 வறிய குடும்பங்களுமாக ஒரு இலட்சத்து ஆறு ஆயிரத்து 420 குடும்பங்கள் நன்மை பெறவுள்ளன - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## 16 இலட்சம்...

க.மகேசன் தெரிவித்துள்ளார்.

இதேகாலப் பகுதியில், டீசல் 8 இலட்சத்து 81 ஆயிரத்து 100 லீற்றரும் மண்ணெண்ணெய் 4 இலட்சத்து 48 ஆயிரத்து 800 லீற்றரும் சுப்பர் டீசல் ஒரு இலட்சத்து 25 ஆயிரத்து 400 லீற்றரும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சுப்பர் பெற்றோல் விநியோகிக்கப்படவில்லை. இதேபோன்று கடந்த 14ஆம் திகதிக்கு பின்னர் மண்ணெண்ணெய் விநியோகமும் இடம்பெறவில்லை.

இதேசமயம், கடந்த 14ஆம் திகதி மட்டும் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 200 லீற்றர் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது. இதேபோன்று, 20ஆம் திகதியும் ஒரு இலட்சத்து 65 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டது - என்றும் அவர் கூறினார். (ஐ-3)

## நாட்டைக்...

யாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இக்கட்டான நேரத்தில் முதிர்ந்த தலைவர்களை அடையாளம் காணும் திறன் நாட்டுக்கு உள்ளது என அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் தலைவர்கள் இப்போது செல்லாக் காசுகளாக மாறிவிட்டனர்- என்றார். (அ)

## தமிழக அரசு அனுப்பிய

# 25 தொன் மருந்துகள் நாளை கிடைக்கும்!

கொழும்பு, மே 26

தமிழக அரசாங்கத்தின் அன்பளிப்பான 25 தொன் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நாளை வெள்ளிக்கிழமை நாட்டை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழக அரசாங்கம் அனுப்பி வைத்த 200 கோடி ரூபாய்க்கும் அதிகமான மனிதாபிமான உதவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடைந்தன. இந்த உதவிப் பொருட்களை சகல மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில், 20 கோடி ரூபாய்க்கும் அதிகமான மருத்துவப் பொருட்கள் நாட்டை நாளை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

# 2020ஆம் ஆண்டு சாதாரண தர பரீட்சை மீள் திருத்த பெறுபேறுகள் வெளியீடு

கொழும்பு, மே 26

2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை மீள் திருத்தப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன இதனைத் தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை, www.donets.lk என்ற இணையத்தள பக்கத்தின் ஊடாகவும், www.results.exams.gov.lk என்ற இணையத்தள பக்கத் தின் ஊடாகவும் மீள் திருத்த பெறுபேறு களை பார்வையிட முடியும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை மீள் திருத்தப் பெறுபேறுகளுக்காக 32 ஆயிரத்து 528 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளனரென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# மண்ணெண்ணெய் இல்லாதமையால் பெரும் சிக்கலில் மட்டக்களப்பு மக்கள்!

மட்டக்களப்பு, மே. 26

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்ணெண்ணெய், எரிவாயு இல்லாத காரணத்தினால் மக்கள் தினமும் தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிக்கல் நிலைகளை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகர் உட்பட பல பகுதிகளில் எரிவாயு அடுப்புகள் மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளே பாவிக்கப்பட்டுவரும் நிலையில், எரிவாயு மற்றும் மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்வதில் கடந்த இரண்டு மாதத்துக்கும் மேலாக பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு - திருமலை வீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் பிற்பகல் வரை கொழுத்தும் வெயிலிலும் பெண்கள், வயோதிபர்கள் என ஆயிரக்கணக்கானோர் நீண்ட வரிசையில் நின்றதை காணமுடிந்தது.

ஒரு கிலோ மீற்றருக்கும் அதிகமான நீண்ட வரிசையில் நின்று மண்ணெண்ணெயை மக்கள் பெற்றபோதும், பெருமளவானோர் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லும் நிலையையும் காணமுடிந்தது. (அ)

## இலங்கைக்கு...

நிதியம் மற்றும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளு டன் ஒருங்கிணைத்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. நாம் ஆலோசனை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட பிற அபிவிருத்தி பங்காளிகளுடன் இணைந்து செயல்படுகிறோம். ஆனால், இலங்கைக்கு நிதி உத வியை வழங்க திட்டமிடவில்லை.

இலங்கை, பொருளாதார நிலை தன்மையை அடைவதற்கான தெளிவான கொள்கைக் கட்டமைப்பை வகுக்கவேண்டும். இலங்கைக்கு ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சில நிதித் திட்டங்களை மதிப்பாய்வு செய்துள்ளதாகவும், இலங்கைக்கு அத்தியாவசிய மருந்துகளை வழங்குவதற்கும், ஏழைகள், விவசாயிகள் மற்றும் சிறு வணிகர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் நிதியுதவி வழங்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஐ)

## இரட்டை...

கிழமைக்கு முன்னர் ஆலோசனை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடலாம் எனும் விதிமுறையை நீக்கி, அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட முடியாது என்பதை சேர்ப்பதற்கு நாம் ஆதரவளிக்க மாட்டோம்.

இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடும் தகுதியை நீக்கும் வகையில் திருத்தம் கொண்டு வரப்பட்டால் அதனை நிறைவேற்ற ஆதரவளிப்பதைத் தவிர்த்து கொள்வோம் என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

எனினும், அனைத்து கட்சிகளும் சட்ட வல்லுநர்களும் அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து இரட்டைக் குடியுரிமை உள்ளவர்கள் தேர்தல்களில் போட்டியிடுவதை இல்லாது ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றனர் என்று சிங்கள ஊடகம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# 20 ஆவது திருத்தத்தை ரத்து செய்யவேண்டும்

## அரசிடம் ஜயசூரிய கோரிக்கை



கொழும்பு, மே 26

**20ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை இரத்து செய்யவேண்டும் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர்சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.**

பேஸ்புக்கில் பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர், 20ஆவது திருத்தத்தை நீக்குவது அரசாங்கத்தின் நேர்மைத் தன்மையை அறிந்து கொள்ளப் பயன்படும் என்று குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை மேலும் கடுமையாகச் சாடிய அவர், புதிய அரசாங்கம் பதவியேற்று இரண்டு வாரங்கள் கடந்தபோதிலும் உறுதியான எதுவும் இடம்பெறவில்லை என்பது கவலையளிப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"எங்கள் மக்கள் இன்னும் வரிசையில் நிற்கிறார்கள். அனைத்து அரசியல்வாதிகளுக்கும் நான் வேண்டு கோள் விடுக்கிறேன், தயவு செய்து மக்களின் துன்பங்களை மறந்துவிடாதீர்கள், என்று ஜயசூரிய மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## சுகாதாரத் துறைக்கு நிதியுதவி; ஸ்ரீலங்கா கிரிக்கெட் தீர்மானம்

கொழும்பு, மே 26

நாட்டின் சுகாதாரத் துறைக்கு 2 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்பட வுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா கிரிக்கெட்டின் நிறைவேற்றுக் குழு நேற்று முன்தினம் கூடியபோது குறித்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் வெளி யிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதற்கமைய லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலைக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்படவுள்ளதுடன், தேசிய புற்றுநோய் வைத்திய சாலைக்கு 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாக வழங்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா கிரிக்கெட் குறிப்பிட்டுள்ளது.

மேலும், குறித்த நிதியுதவியின் அவசரத் தன்மை கருதி நன்கொடைக்கான நிதியை உடனடியாக விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## சட்டவிரோதமாக எரிபொருள் சேகரித்த 137 பேர் சிக்கினர்!

கொழும்பு, மே 26

சட்டவிரோதமாக எரிபொருள் சேகரித்த 137 பேரை கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தத்துவ தெரிவித்தார்.

நாடு முழுவதும் மேற்கொண்ட 429 சுற்றி வளைப்பு களில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், இந்த சுற்றி வளைப்புகளில் 27 ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 22 ஆயிரம் லீற்றர் டீசலும் கைப்பற்றப்பட்டுள்ளது எனவும் கூறினார். (அ)

## 21 ஆவது திருத்தத்துக்கு வாசுதேவவும் ஆதரவு!

கொழும்பு, மே. 26

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு முழுமையாக ஆதரவளிக்கப்படும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதையும், பதவிகள் வகிப்பதையும் தடுக்கும் ஏற்பாடு கட்டாயம் அமுல்படுத் தப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புதிய பிரதம ரைத் தெரிவு செய்த அணுகுமுறையைத் தமது கட்சி அனுமதிக்காது எனவும், அதனால்தான் அரசில் இணையவில்லை எனவும் ஊடகங்களிடம் வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டினார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 11 - 1932



மறைவு 22 - 05 - 2022

### நாராயனர் இராசரத்தினம்

Retired Teacher – Served in Panadura, Hatton, Colombo, Srilanka, Sokoto State - Nigeria; London -UK

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை, கொழும்பு, நைஜீரியா Sokota State ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், பிரித்தானியா London ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட நாராயனர் இராசரத்தினம் அவர்கள் 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாராயனர் தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், சிவகொழுந்து பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதி இராசரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும்,வித்தியகலா, சுரேஸ்குமார், கேமேந்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,பிரகாஷ், கவிதா, ஆயத்ரி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தெய்வஜனனி, நவலஷ்மி, ஜெயன், ஈஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

கிரியை
Sunday, 29 May 2022 10:30 AM - 1:00 PM
Easthampstead Park Cemetery and Crematorium South Road, Bracknell, Wokingham RG40 3DW, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கேமேந்திரகுமார் - மகன்**

தொடர்புகளுக்கு:
**கேமேந்திரகுமார் - மகன்** Mobile : +447867900301
**வித்தியகலா - மகள்** Mobile : +447882026899

## இங்கிலாந்து பாணற் கவுன்சில் மிடில்செக்ஸ் கவுண்ரி பிரதி மேயராக யாழ்ப்பாணப் பெண் தெரிவு



### திருமதி நாகேஸ்வரி நரேந்திரா

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, விதானையார் வீதியைச் சேர்ந்த **திருமதி நாகேஸ்வரி நரேந்திரா** இங்கிலாந்து பாணற் கவுன்சில் மிடில்செக்ஸ் கவுண்ரி பிரதி மேயராக (Deputy Mayoress, Barnet Council, Middlesex County London) தெரிவு செய்யப்பட்டுள்ளார். முதன்முறையாக இலங்கை பெண் ஒருவர் பிரதி மேயராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் வைத்தியர் காலஞ்சென்ற கேதுசிகாமணி கணேசரட்ணம் அவர்களின் சகோதரி ஆவார்.

தகவல்:
**திருமதி ச.சுரேந்திரன்**
**077 843 5430**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் உளவள துணையாளர்
திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர்
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-யாமிருக்க பயமேன்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை

**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய
நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்-இசை நிகழ்ச்சி
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ரிவி

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகக்கோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு